பக்கங்கள்: 15

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 17 வெள்ளிக்கிழமை 02.08.2024 கதிர் 268

## பொலிஸ் நிர்வாகத்தை கவனிக்க பிரதி பொலிஸ் மா அதிபர் நியமனம்

### ஆணைக்குழு வழங்கியது

பொலிஸ் நிர்வாகப் பிரிவு பிரதானியின் பணிகளை மேற்கொள்வதற்காக சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் பத்திநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் கூடிய பொலிஸ் ஆணைக் குழுவினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பதவியில் முன்னர் இருந்தவரான நிலந்த ஜயவர்தனவுக்கு கட்டாய விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையில் அப்பதவிக்கு ஒருவரைப்பெயரிடுமாறு ஜூலை 18 கூடிய பொலிஸ் ஆணைக்குழு பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்திருந்தது. ஆனால் அது தொடர்பில் ஜூலை29வரைநடவடிக்கை எடுக்கப்படாத நிலையில், பொலிஸ் மா அதிபரின் பதவியில் எவரும் நியமிக்கப்படாத நிலையிலும் சட்ட மாஅதிபரின் ஆலோசனைக்கமைய குறித்தநியமனம்வழங்கப்பட்டுள்ளதாக, தேசிய பொலிஸ் ஆணைக்குழு விடுத்துள்ள ஊடக அறிவித்தலில் தெரிவிக்கப்பட் 8

இறக்குமதியாளருக்கு சலுகை வழங்கி

## உற்பத்தியாளருக்கு சுமை ஏற்படுத்தும் தற்போதைய நிலமை மாறவேண்டும்

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

இறக்குமதியாளருக்கு சலுகை வழங்கி, தேசிய உற்பத்தியாளருக்குசுமையை ஏற்படுத்துவதும்நிலமைகளை மாற்றவேண்டும். தற்போதைய ஆளும்தரப்பு இந்த நிலைப்பாட்டை மாற்றாவிடின், ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் நாம் இதனைமாற்றியமைப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாசதெரிவித்தார்.

பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோரை பாதுகாக்கும் இரட்டைக் கொள்கைகளை கொண்டமைந்த அரச கொள்கையொன்று தேவை என்றாலும்,இன்று,உள்நாட்டு உற்பத்தியாளர்மீது18வீதவற்வரியை விதித்து, இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர் மீதான வரியை நீக்கி, ஒரு சிலரைப் பாதுகாக்க அரசாங்கம் எடுத்துள்ள இந்த சமநிலையற்ற 8

## இது ரகசியம் அல்ல!

குதிரைக்கு முன்னாள் காரட்டைக் கட்டுவதைப் போன்று, அரசமைப்பின்13ஆவதுதிருத்தத்தை நடைமுறைப்படுத்துவதை ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக தமிழ் மக்களுக்கு முன்பாகத் தொங்க விடுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் பொது ஜன பெரமுன ரணிலுக்கு ஆதரவளிப்பதில்லைஎன்கிறமுடிவை எடுத்தத்தைத் தொடர்ந்து, அந்தக் கட்சியை உடைத்து அதிலிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தன்வசப்படுத்திய ரணில், அடுத்த கட்டமாக தமிழர்களை எப்படியாவது ஏமாற்றிவாக்குகளைத் திருடிக்கொள்ளலாம் என்று திட்டம் போட்டுள்ளார்.

இதன் முதற்கட்டமாக அரசமைப்பின்13ஆவதுதிருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அவர் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை அழைத்துப் பேசியுள்ளார். ஜனாதிபதிசெயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில், ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு வசதியாக மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தில் திருத்தங்களை உடனடியாகச் செய்வதற்கு ரணில் இணக்கம் தெரிவித்திருக்கிறார். இதற்கு வசதியாக, ஏற்கனவே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஒரு மூலையில் போடப்பட்டுக் 2

# ஜனநாயக மரபுகளை அச்சுறுத்தும் வேட்பாளரை நிராகரிக்கவேண்டும்

## சிவில் அமைப்புக்கள் வலியுறுத்து

அரசமைப்பின் தெளிவான நோக்கத்தைமீறமுற்படும்,நாட்டின் ஜனநாயகமரபுகளைஅச்சுறுத்தும் எந்த ஜனாதிபதி வேட்பாளரையும் நிராகரிக்கவேண்டும் எனநாங்கள் எங்கள் மக்களிற்கும் அனைத்து வேட்பாளர்களிற்கும்நினைவுபடுத்த விரும்புகின்றோம்எனஇலங்கையின் சிவில்சமூக செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

142 சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் கல்விமான்களும், 30க்கும்மேற்பட்டஅமைப்புகளும் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனை தெரிவித்துள்ளனர். 2

## பணவீக்கம் உயர்வு

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மதிப்பீட்டின் பிரகாரம் கடந்த ஜூன் மாதம் 1.7 சதவீதமாகப்பதிவாகியிருந்தபணவீக்கம், ஜூலை மாதம் 2.4 சதவீதமாக உயர்வடைந்துள்ளது.

அதன்படி, கடந்த ஜூன் மாதம் 1.4 பதிவான உணவுப்பணவீக்கம் ஜூலையில் 1.5 சதவீதமாகவும்,ஜூன் மாதம் 1.8 சதவீதமாகப் பதிவான உணவல்லாப்பணவீக்கம்ஜூலையில் 2.8 சதவீதமாகவும் உயர்வடைந்தன.

மேலும், கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் 8

லஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில்

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் செயலாளர், கட்சி இணைப்பாளர் கைது

மட்டக்களப்பில் மண் அகழ்வதற்கான அனுமதி வழங்க கட்டிட ஒப்பந்தக்காரர் ஒருவரிடம் 15 இலட்சம் ரூபாவை இலஞ்சமாகப் பெற்ற குற்றச்சாட்டில் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் செயலாளர் மற்றும் அவரது கட்சி இணைப்பாளர் உட்பட இருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்லடிகடற்கரையில் மாறுவேடத்தில் இருந்த இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சந்தேகநபர்கள் இருவரையும் பொலன்னறுவை பொலிஸ் தலைமையகத்துக்குக் கொண்டுசென்று விசாரணையின்பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்தி கொழும்புக்குஅழைத்துச் செல்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இராஜாங்க 2

## பொது வேட்பாளர் தோற்றதன் பின்னர் அரசுடன் பேச முடியாத நிலை ஏற்படும்

### சுமந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு

ஜனாதிபதித்தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் தோல்வியடைந்த பின்னர், பதவியேற்கப்போகும் ஜனாதிபதி தலைமையிலானஆளும் தரப்புடன் அரசியல் தீர்வுக்காகப்பேச்சு நடத்த முடியாத நிலை ஏற்படும் என்று இலங்கைத் தமிழரசுக்கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர் மேலும்தெரிவித்ததாவது:

எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களுடன் 8

## சர்வதேச நாணய நிதிய குழுவினர் எதிர்க் கட்சித் தலைவருடன் பேச்சு

இலங்கையின் சமகால பொருளாதார நிலைவரம் மற்றும் மறுசீரமைப்புக்களில் அடையப்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் நோக்கில் இலங்கைக்கு வருகை தந்துள்ள சர்வதேச நாணயநிதியஅதிகாரிகள் குழு, ஜனாதிபதி, எதிர்க்கட்சித்தலைவர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கையினால் எட்டப்பட்ட விரிவாக்கப்பட்ட நிதிவசதிச் செயற்திட்டத்தின்கீழ் நாட்டின் பொருளாதாரத்தில் அடையப்பட்டுள்ள சாதக மாற்றங்கள் 8

## கட்சி அரசியலைப் புறந்தள்ளிவிட்டு ரணிலுக்கு ஆதரவளிக்கவேண்டும்

### இப்படிச் சொல்கிறார் அயலுறவுத்துறை அமைச்சர்

கட்சி அரசியலைப் புறந்தள்ளிவிட்டு ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவினால் நாட்டை முன்னேற்றுவதற்கு எடுக்கப்படும் திட்டங்களுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களுடன் பேசிய அவர் தெரிவித்ததாவது: 8

## ஜனாதிபதிக்கும் ஆதரவில்லை பெரமுனவிற்கும் ஆதரவில்லை

### அறிவித்தார் சம்பிக்க ரணவக்க

ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கும் ஆதரவில்லை. ராஜபக்சக்களின் பொது ஜன பெரமுன நிறுத்தப் போகும் வேட்பாளருக்கும் ஆதரவில்லை என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற 8

## கடற்படை படகு மோதி விபத்து இந்திய மீனவர் கடலில் இறப்பு

### இலங்கைத் தூதரை அழைத்து கண்டித்தது புதுடில்லி

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட இந்திய மீனவர் படகு மீது இலங்கைக் கடற்படையினரின் படகு மோதியதில் அதில் பயணித்தமீனவர்ஒருவர் உயிரிழந்தார்.இருவர் காயமடைந்தனர். மற்றவர் காணாமற் போயுள்ளார்.

உயிரிழந்த மீனவரின் சடலம் 8

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

கிடந்த சுமந்திரன்னி தனிநபர் சட்டத் திருத்தப் பிரேரணையைத் தூசு தட்டித் திறந்து அதனை நாடாளுமன்றத்தில் ஒகஸ்ட் 22, 23 திகதிகளில் விவாதிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

2015இல் அதிகாரத்திற்கு வந்த மைத்திரி ஷ்- ரணில் கூட்டணி ஆளும் தரப்பின் இறுதிக் காலத்தில் இந்தப் பிரேரணை நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால் சமர்ப்பிக்கப்பட்டது. கடும் முயற்சிகளுக்குப் பின்னர் அது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுத் தயார் நிலையில் இருந்தபோதும் நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுக்கப்படவில்லை.

தற்போது அதனைத் தூசுதட்டி எடுத்துநாடாளுமன்றத்தில்விவாதித்த நிறைவேற்றத் தயார் என்று ரணில் வாக்குறுதியளித்துள்ளார். அதற்கேற்ப அந்த சட்டத் திருத்தப் பிரேரணையைநாடாளுமன்றத்தில் விவாதிப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இன்று நாடாளுமன்றத்தில் நடக்க கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் விவாதத்திற்கான திகதி இறுதி செய்யப்படவுள்ளன. இந்தச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றினால் ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியும் என சுமந்திரனுக்கு உறுதியளித்துள்ளார் ரணில் விக்கிரமசிங்க.

அவர் தேர்தலில் வென்று ஜனாதிபதியாவாரா, அப்படியே வென்றாலும்கூட வாக்குறுதியளித்தபடிநாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு முன்பாக மாகாண சபைத் தேர்தலை நடத்துவாரா என்பதெல்லாம் ஆண்டவனுக்கும்தெரிந்திருக்குமோ தெரியாது. இப்போதைக்கு ரணிலுக்கு தமிழர்களின் வாக்குகள் தேவை. அதற்காக எந்தப் பொய்யையும் சொல்ல, செய்ய அவர் தயாராக இருக்கிறார். அத்தகைய நிலையிலும்கூட மாகாண சபைகளுக்குப் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்கு ரணில் விக்கிரமசிங்க தயாராக இல்லை. அது -குறித்துப் பின்னர் பார்த்துக்கொள்ளலாம் என்பதுதான் நேற்றும் அவரது நிலைப்பாடாக இருந்துள்ளது.

அதேநேரம், தனக்குத் தேவையான திருத்தங்களை சுமந்திரனின் பிரேரணையில் செய்வதிலும் ரணில் குறியாக இருக்கின்றார். மாகாண சபைகளில் இளைஞர், யுவதிகளுக்கு போதிய பிரதிநிதித்துவம் வழங்குவதை உறுதிப்படுத்தல், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அப்பதவியில் இருந்து கொண்டே மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவகை செய்தல் போன்ற திருத்தங்கள் செய்யப்படவேண்டும் என்பதில் அவர் பிடிவாதமாக இருக்கின்றார்.

சட்டமூலத்தின் குழு நிலை விவாதத்தின்போது சட்டமா அதிபரின் இணக்கத்துடன் அந்த மாற்றங்களைக் கொண்டுவர முயற்சிக்கலாம் எனக் கூறி இப்போதைக்கு நிலமையை சுமந்திரன் சமாளித்துள்ளார்.

13ஆம் திருத்தத்தில் இருக்கும் காணி அதிகாரப் பகிர்வை மாகாணசபைகள் உடனடியாக பிரயோகிப்பதற்குத் தேசிய காணி ஆணைக்குழு நிறுவப்பட வேண்டும். தேசியகாணிஆணைக் குழுவுக்கான கட்டமைப்புதயாராக இருப்பதாகவும், அது உடனடியாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்படுவதற்குகாலதாமதம் இன்றி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கஇந்தச்சந்திப்பின்போது உறுதி கூறினார். தேசிய காணி ஆணைக்குழு நிறுவப்பட்டு காணிகள் தொடர்பான தேசிய கொள்கைகள் வகுக்கப்பட்டால், காணிகள் நேரடியாக மாகாண நிர்வாகத்தின் கீழ் வந்துவிடும் என்பது குறிப்பிடத்தக்கது.

உண்மை நல்லிணக்க ஆணைக்- குழுவும் உடனடியாக நிறுவப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தம்மூலம்மாகாணங்களுக்குப் பகிரப்பட்ட பல அதிகாரங்களில் காலத்துக்குக் காலம் கொழும்பு அரசால்மீளப்பெறப்பட்டஅதிகாரங்கள் அனைத்தையும் உடனடியாகத் திருப்பிவழங்குவதற்கானஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் ஜனாதிபதி உறுதியளித்தாராம்.

கடந்த மாதமும் நாடாளு மன்றத்தில் நாடாளுமன்றத்தில் சுமந்திரனையும்சாணக்கியனையும் தனது அறையில் சந்தித்துப் பேசிய ஜனாதிபதி இந்த விடயம் குறித்துப் பேசினார். ஆனால், எதுவும் நகரவில்லை. இப்போதுவேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் தமிழர்கள் மத்தியில் தனக்குக் குறைந்தபட்ச செல்வாக்குக்கூட இல்லைஎன்பதைப்புரிந்துகொண்டு அவர்களிடம் செல்வதற்காக இந்த ஏமாற்று நாடகத்தைத் தொடங்கி இருக்கிறார் ரணில்.

இதற்கு முன்னர் அவர் இது விடயமாகப் பல தடவைகள் தமிழ்த் தலைவர்களை ஏமாற்றி இருக்கிறார். சுமந்திரனைமட்டுமல்ல விக்னேஸ்வரனையும்அவர்ஏமாற்றி இருக்கிறார். ரணில் சொன்னதை நம்பி விக்னேஸ்வரனும் இப்படி 13இன் முழுமையான நடைமுறையாக்கம் என்றுகூறி பறந்த பறந்து பணியாற்றினார். ஆனால் கடைசியில் அவருக்குப் பெப்பே கொடுத்த ரணில், அவரால் ஆகப் போவது ஒன்றுமில்லை என்று உணர்ந்த ரணில், குறைந்த பட்சம் தமிழ் அரசுக் கட்சியின் ஆதரவையாவது தன்பக்கம் திருப்ப முடியுமா என்று முயற்சிக்கிறார். மற்றக்கட்சிகளைசாராயவிற்பனை அனுமதியைவழங்குவதன்மூலமே வாங்கிக்கொள்ளலாம் என்பது அவரது கணக்குப் போலும்.

ஒருவேளை ரணில் தேர்தலில் வென்று மீண்டும் ஜனாதிபதியானாலும்கூட அவர் வாக்குறுதியளித்தபடி மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துவார் என்பதற்கான எந்த உத்தரவாதமும் கிடையாது. அவர் மீண்டுத்தமிழர்களைஏமாற்றுவார். அது அவரது பரவணிக் குணம். அவரதுஅரசியல்வரலாறுமுழுவதும் அவர் அதை மட்டுமே செய்துள்ளார்.

அது-போன்றே காணி ஆணைக்குழுவைநியமித்தாலும்கூட அதனை இயங்க அனுமதிப்பார் என்று சொல்லமுடியாது. தனது நரித்தனங்களைப் பயன்படுத்தி அவற்றைத் தடுப்பார் அல்லது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும்தீர்மானங்களை நீர்த்துப்போய், முடங்கிப் போகச் செய்துவிடுவார்.

இப்போது அவரது கண்ணுக்கு தமிழர்கள் வாக்குச் சீட்டுக்களாக மட்டுமே தெரிகிறார்கள். அதனால் அவற்றை அறுவடை செய்ய அவர் எந்த எல்லைக்குச் சென்று பொய்களையும் புரட்டுக்களையும் செய்வதற்கும் அவர் தயாராக இருக்கிறார்.

தமிழர்களுக்கு வேறு வழி யில்லை. அதனால் பேச்கூப்பிட்டால் போய்த்தானாகவேண்டும். எதையாவது தந்தால் அதையும் வாங்கிக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் ஏமாற்றும் ரணிலுக்கு ஏமாற்றங்களைக் கொடுப்பதுதான் ராஜதந்திரமாக இருக்க -முடியும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஜனநாயக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித் துள்ளதாவது:

பொலிஸ் மா அதிபர் நியமனத்திற்கு எதிரான ஒன்பது மனுக்களையும் ஆறு நாட்களாக செவிமடுத்த பின்னர் ஜூலை 24 காலை 9.30 மணிக்கு பொலிஸ் மா அதிபரின்நியமனம்அரசமைப்பிற்கு முரணானதுபோலதோன்றுகின்றது இது குறித்து முழுமையாக மீள ஆராயவேண்டும் என உயர் நீதிமன்றம் தீர்மானித்தது.

அதுவரை காலமும் தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத்தில் பணி யாற்றுவதுகட்டுப்படுத்தப்பட்டுள்ளது என நீதிமன்றம் உத்தரவிட்டது. இடைக்காலத்தில்பதில்பொலிஸ்மா அதிபரை ஜனாதிபதி நியமிக்கலாம் எனவும்நீதிமன்றம் உத்தரவிட்டது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பில் எந்த குழப்பங்களும் தெளிவின்மையும் இல்லை.

தென்னக்கோனின் நியமனம் அரசமைப்பிற்கு முரணானது என உயர் நீதிமன்றம் இறுதியாக தீர்மானித்தால் அந்த நியமனம் செல்லுபடியற்றது என்பதே அதன் அர்த்தம். நீதிமன்றத்தின் முன்னால்உள்ளவழக்குநியமனம் தொடர்பானது, பொலிஸ்மாஅதிபராக பணியாற்றுபவரைஅகற்றுவதற்கும் அதற்கும் எந்தத் தொடர்புமில்லை.

பதில் பொலிஸ் மா அதிபரை நியமிக்கும் விடயத்தில் ஜனாதிபதி வெளிப்படுத்துகின்ற வேகம் பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னக்கோனை நியமிப்பதில் அவர் காண்பித்த வேகத்திற்கு எதிர்மாறானதாக இருக்கின்றது.

தேசபந்து தென்னக்கோனின் பதில்பொலிஸ்மாஅதிபர்நியமனம் முடிவடைவதற்குமூன்றுநாட்களிற்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்க அவரை பொலிஸ் மா அதிபராக நியமித்தார். -(அவ்வேளை நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது)

பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னக்கோனை நியமிக்கவேண்டும்எனபெப்ரவரி25 கடிதத்தில்ஜனாதிபதிவேண்டுகோள் விடுத்தார், அரசமைப்புபேரவைக்கு பெப்ரவரி26 இந்தகடிதம்கிடைத்தது அன்றைய தினமே அரசமைப்பு பேரவை இதனை ஆராய்ந்தது.

பொலிஸ்மா அதிபரை நியமிப்பதற்கானநடவடிக்கைகளை ஜனாதிபதி வேண்டுமென்றே தாமதிப்பது சட்டத்தின் ஆட்சி பொது பாதுகாப்பு ஆகியவற்றை குறைமதிப்பிற்கு உட்படுத்தி அரசமைப்பு நெருக்கடியை ஏற்படுத்தலாம்.

அரசமைப்பின் முடிவுகளை மறைப்பதற்காகநாடாளுமன்றத்தின் விரிவுபடுத்தும் எந்தவொரு முயற்சியும், தவறான சமத்துவம், அரசமைப்பு குழப்பம் மற்றும் தவறான முயற்சியுமாகும்.

மேலும் அரசமைப்புப் பேரவையின் மீதான நீதித்து றையின்கண்காணிப்பைநீக்குவதற் கானஅரசமைப்புதிருத்தம்மக்களிட மிருந்து நீதித்துறை உரிமை களை பறிக்கின்றது, சட்டத்தின் முன் சமமான பாதுகாப்பிற்கான உரிமையைப்பறிக்கின்றதுஎனவும் உயர்நீதிமன்றம் ஏற்கனவே தெளிவாகத் தீர்மானித்துள்ளது.

குழப்பத்தை உருவாக்கும் நடவடிக்கைகளை, சட்டம் குறித்து பொதுமக்களை தவறாக வழிநடத்துவதை, ஜனநாயக செயல்முறைகளைசீர்குலைப்பதை, உயர் நீதிமன்றத்தை குறைம திப்பிற்குஉட்படுத்துவதைசட்டத்தின் ஆட்சியை அவமதிப்பதை, சட்டத்திற்கு இணங்கக்கூடாது என்ற மறைமுக நோக்கத்தை வெளிப்படுத்துவதை ஜனாதிபதியும் ஆளும்தரப்பும் நிறுத்தவேண்டும்.

ஜனாதிபதியினதும் ஆளும் தரப்பினதும் இந்த ஜனநாயக விரோத நடவடிக்கைகளை நாங்கள் கண்டிக்கின்றோம். தேர்தல் முடிவுகளில் செல்வாக்குச் செலுத்தும் நோக்கத்துடனேயே நிறைவேற்றுஅதிகாரம்அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்கின்றது என கருதும் நாங்கள், அரசமைப்பின் தெளிவான நோக்கத்தை மீற முற்படும் நாட்டின் ஜனநாயக மரபுகளை அச்சுறுத்தும் எந்த ஜனாதிபதி வேட்பாளரையும் நிராகரிக்கவேண்டும்எனமக்களிற்கு நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

இலங்கையின் அரசியலை நீண்டகாலமாக பாதித்துவந்துள்ள நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் ஜனநாய விரோத

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# அமைச்சரின் கடனட்டையை களவாக பயன்படுத்திய நபர்

## முறைப்பாட்டை அடுத்து விசாரணை ஆரம்பம்

அமைச்சர் பந்துல குணவர்தனவின் கடன் அட்டையை அவரது அனுமதியின்றி ஒருவர் உபயோகித்துள்ளார் என்று பொலிஸார் தெரி வித்தனர்.

அந்தச் சந்தேகநபர் தொடர்பில் தாம் விசாரணைகளைத் தொடக்கியுள்ளனர் என்று குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களம் கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனுவெலவிடம் தெரிவித்துள்ளது. திணைக்களத்தின் விஷேட பிரிவு உப பொலிஸ் பரிசோதகர் நிரோஷன் லக்மால் நீதிமன்றத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமது பிரத்தியேக பணியாள் தொகுதியில் பணிபுரிந்த முன்னாள் ஊடகச் செயலாளர் மகேஷ் விக்கிரம என்பவரே, தமது அனுமதியின்றி இந்த கடன் அட்டையை உபயோகித்துள்ளார் என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார் என்றும் குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களம் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

பல்வேறுமுறைகேடுகள்காரணமாகசந்தேகநபரைத் தான் அமைச்சரின் பணியாற்தொகுதியிலிருந்து சேவை நீக்கம் செய்தார் என்றும் அமைச்சரின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்தல் சட்ட மீறல்கள் குறித்து இதுவரை 125 முறைப்பாடுகள்

தேர்தல்சட்டத்தைமீறியமைஉள்ளிட்ட125-இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நியமனம் வழங்குதல், இடமாற்றம் மற்றும் பதவி உயர்வு வழங்குதல் ஆகியன இதற்குள் அடங்குவதாக ஆணைக்குழுவின் முறைப்பாட்டு பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் தேர்தல் தொடர்பில் முறைப்பாடுகள் இருப்பின்தேர்தல்ஆணைக்குழுவில்ஸ்தாபிக்கப்பட்டுள்ள முறைப்பாட்டு பிரிவில் அவற்றை முன்வைக்க முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட் டுள்ளது.

இதேவேளை, தேர்தல் காலப்பகுதியில் இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளில் பெரும்பாலானவை, அரச சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துகின்றமை தொடர்பிலேயே கிடைக்கப்பெற்றுள்ளதாக பெஃப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

# 10 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தினர்

செப்டெம்பர் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுதற்கு நேற்ற வரையான காலப்பகுதிக்குள் மாத்திரம் 10 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்கு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்கு கடந்த மாதம் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை வெளியிட்டது.

புதிய ஜனநாயக முன்னணி சார்பில் போட்டியிடுவதற்கு ஓசல ஹேரத்தும்;,இலங்கை தொழிலாளர் கட்சி சார்பில் ஏ.எஸ்.பி.லியகவேும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் சஜித் பிரேமதாசவும்,தேசிய அபிவிருத்தி முன்னணி சார்பில் எஸ்.கே.பண்டாரநாயக்கவும்,தேசிய ஜனநாயக முன்னணி சார்பில் விஜயதாஸ ராஜபக்ஷவும்,ஐக்கிய சோஷலிச கட்சி சார்பில் சிறிதுங்க ஜயசூரியவும், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் என்ற ரீதியில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

அதேவேளை அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சி என்ற பிரிவில் றுஓஹறுணு மக்கள் முன்னணி சார்பில் அஜந்த த சொய்ஸா கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

மேலும் சுயேட்சையாக போட்டியிடும் வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க,சரத் கீர்த்தி ரத்ன,கே.கே.பியதாஸ ஆகியோர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

இவர்களில் விஜயதாஸ ராஜபக்ஷ,கே.கே.பியதாஸ,சிறிதுங்க ஜயசூரிய மற்றும் அஜந்த த சொய்ஸா ஆகியோர் நேற்று வியாழக்கிழமை கட்டுப்பணம் செலுத்தியதாக ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதற்கமைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி சார்பில் போட்டியிட 08 வேட்பாளர்களும், சுயாதீனமாக போட்டியிட 02 வேட்பாளர்களும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை செலுத்துவதற்கு எதிர்வரும் மாதம் 14 ஆம் திகதி வரை காலவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் வேட்பாளர் 50,000 ரூபாவும்,சுயாதீனவேட்பாளர் 75,000 ரூபாவும் கட்டுப்பணமாக செலுத்தப்பட வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# சமஷ்டியை ஏற்கும் வேட்பாளருக்கே தமிழ் மக்கள் வாக்களிக்கவேண்டும்

## வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு குழு வலியுறுத்தல்

ஜனாதிபதிதேர்தலில்சமஷ்டிகோரிக்கையைமுன்வைக்கும் வேட்பாளருக்கே நாம் வாக்களிக்க வேண்டும் என வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா தெரிவித்துள்ளார்.

நேற்று (வியாழக்கிழமை) யாழ்ப்பாணத்தில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதிதேர்தலில்போட்டியிடப்போகும்வேட்பாளர்களுக்கு நாம் பகிரங்கமான கோரிக்கையை முன்வைக்கின்றோம். உங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வாக சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும்.

இலங்கையின் வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு நிலையான, கௌரவமான, உரிமைகளுடன் கூடிய நிலையான அரசியல் தீர்வு கோரி 2022 ஆம் ஆண்டு ஆவணி முதலாம் திகதி சுழற்சி முறையிலான 100 நாள்கள் செயல்முனைவினை ஆரம்பித்து, 2022 கார்த்திகை எட்டாம் திகதி சமஷ்டி தீர்வுக்கான மக்கள் பிரகடனத்தை வெளியிட்டோம்.

வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களான நாம் எதிர்கொண்டுவரும் அரச இனவாத அடக்குமுறையில் இருந்து மீண்டு கௌரவமான, உரிமைகளை அனுபவிக்கும் பிரஜைகளாக வாழவேண்டுமாயின் நிலையான அரசியல் தீர்வே அவசியம்.

ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான தீர்வு ஒன்றையே நாம் திடமாக வலியுறுத்தி நிற்கின்றோம்.

இலங்கையில் நாம் சிறுபான்மையினர் அல்லர் இலங்கையின் வடக்கு கிழக்கு பிராந்தியத்தில் எமக்கான சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய இறைமையுள்ள மக்கள் சமூகத்தினராவோம். எமது சுயநிர்ணய உரிமை, இறைமை என்பதை சமஷ்டி முறைமையின் மூலம் உறுதிசெய்து கொள்ள திடசங்கற்பம் கொண்டுள்ளோம்.



இதுவரை காலமும் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசியல் தலைமைகள் அரசியல் தீர்வுகள் பற்றி வாயளவில் கதைத்து தமிழ்மக்களை ஏமாற்றி வந்துவிட்டனர். எவ்வளவு காலத்துக்கு எமது வருங்கால சந்ததியினரும் இந்த அடக்குமுறைகளையும் ஏமாற்றங்களையும் அனுபவிக்கப் போகின்றோம்.

எமது தலைமுறையுடன் துன்பங்களை முடிவுக்குக் கொண்டுவர ஒரு மக்கள் சமூகமாக ஒருங்கிணைந்த செயற்படுவோம். இதற்கு அனைவரும் ஜனநாயக வழிநின்று செயற்படும் ஒரு சமூக இயக்கமாக பரிணமிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.

(05)

# கல்முனை மாநகர சபையின் புதிய ஊழியர்களுடன் சந்திப்பு



(அஸ்லம் எஸ். மௌலானா)

கல்முனைமாநகரசபையில்புதிதாக நிரந்தர நியமனம் பெற்ற ஊழியர்களுடனான சந்திப்பு திங்கட்கிழமை மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் தலைமையில் மருதமுனை பொது நூலக சமூக வள நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.



உள்ளூராட்சி மன்றங்களில் தற்காலிக, ஒப்பந்த, அமைய அடிப்படையில் கடமையாற்றி வருகின்ற ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் அரச திட்டத்தின் கீழ் கல்முனை மாநகர சபையில் பல வருடங்களாக கடமையாற்றிவந்த102ஊழியர்களுக்கு நிரந்தரநியமனம்வழங்கப்பட்டுள்ளது.



இவர்களுள் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்ட 99 ஊழியர்க ளுக்கான முதல் மாத சம்பளம் இதன் போது வழங்கி வைக்கப்பட்டது.

இதற்காக கல்முனை மாநகர சபையின் சொந்த நிதியில் இருந்து சுமார் 49 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாநகர சபையின் உதவிஆணையாளர்ஏ.எஸ்.எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸி, கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், பிரதம சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் அர்ஷாத் காரியப்பர், நிதி உதவியாளர் யூ.எம். இஸ்ஹாக், நிதிப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.ஏ.பாஸித் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில்மாநகரஆணையாளர், கணக்காளர் மற்றும் உதவி ஆணையாளர் ஆகியோர் தமது உரைகளின்போது புதிய ஊழியர்களுக்கான வரப்பிரசாதங்கள், கட்டுப்பாடுகள், ஒழுக்க விழுமியங்கள் மற்றும் அறிவுறுத்தல்களை எடுத்துரைத்து, அவற்றை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தனர். (05)

# பொலிஸ்மா அதிபர் நெருக்கடிக்கு தீர்வு காண்க நீதியான சுதந்திரமான தேர்தலை உறுதி செய்க

## பவ்ரல் ஜனாதிபதிக்குக் கடிதம்

பொலிஸ்மா அதிபர் குறித்த விவகாரத்தால் உருவாகியுள்ள பிரச்சினைக்குஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க தீர்வு காணவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள தேர்தல்கண்காணிப்புஅமைப்பான பவ்ரல், ஜனாதிபதி தேர்தல் சுதந்திரமானதாக நடைபெறுவதை உறுதி செய்வதன் மூலம் மக்களின் வாக்குரிமையைப் பாதுகாக்குமாறும்வேண்டுகோள்விடுத்துள்ளது.



பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அந்த கடிதத்தில் பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளவை வருமாறு -

கடந்த ஆறு வருடங்களாக உள்ளூராட்சி வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கான உரிமை பொதுமக்களிற்கு வழங்கப்படவில்லை.

உள்ளூராட்சிஅமைப்புகளிற்கு உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான வாய்ப்புகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

ஐந்து வருடங்களிற்கு பின்னர் தங்கள் ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கு மக்களிற்கு கிடைத்துள்ள இந்த சந்தர்ப்பம் தொடர்பில் பல நிச்சயமற்ற தன்மைகள் உருவாகியுள்ளன.

அரசமைப்பின் போதாமை காரணமாக யாராவது இந்த நாட்டு மக்களின் வாக்குரிமைய பறிக்கும் நிலை ஏற்படுவதற்கு ஜனாதிபதிஎன்றவகையில்நீங்கள் இடமளிக்க கூடாது.

பொலிஸ்மா அதிபர் இல்லாதமையால் தேர்தலை நடத்துவது பாதிக்கப்பட்டால் ,தேர்தலை நடத்தும் உங்களின் கடமையைநிறைவேற்றுவதற்காக நிறைவேற்று ஜனாதிபதி என்ற முறையில் உங்களிற்குள்ள அதிகாரங்களை பயன்படுத்தி பொலிஸ்மா அதிபரை நியமிக்க வேண்டும்.

அரசமைப்பில் உங்களிற்கு என தெரிவிக்கப்பட்டுள்ள கடமைகளை பதவியில் உள்ள ஜனாதிபதி என்ற அடிப்படையில் நீங்கள் நிறைவேற்றுவீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

சுதந்திரமான நீதியான தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவிற்கு உதவுமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(05)

# புத்தளம் ஐக்கிய மக்கள் சக்தியின் ஸ்மார்ட் ஊடக குழுவின் ஒன்றுகூடல்



(எம் சியாஜ் )

ஐக்கிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட ஸ்மார்ட் ஊடக குழுவின் ஒன்றுகூடல் செவ்வாய்க்கிழமை சிலாபம் பாஇன் கடற்கரை விடுதியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின்பிரதமஅதிதியாக ஐக்கியமக்கள்சக்தியின்தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸவின் பாரியார் ஜலனி பிரேமதாஸ கலந்துகொண்டார். அத்தோடு ஐக்கிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி முன்னாள் பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் விக்டர் என்டனி, முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினர் எஸ்.எச்.எம் நியாஸ் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள், முன்னாள் நகர சபை உறுப்பினர்கள் பிரதேசசபை உறுப்பினர்கள் கட்சியின் பிரதேச அமைப்பாளர், மகளிர் அமைப்பு தலைவிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

தற்போதைய சமூக ஊடகங்களில் பெறும் பங்காளர்களாக சேவையாற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடக குழு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் வெற்றிக்கு எவ்வாறு கடமையாற்ற வேண்டும் அதன் மூலம் கட்சி அடைய உள்ள வெற்றி என்பன பற்றிய தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டமை சிறப்பம்சமாகும். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ரணிலின் ஏமாற்றுத் தந்திரம்

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுடன் பேச்சு நடத்தியிருக்கிறார் என்று செய்திகள் வந்துள்ளன. நாடாளுமன்றத்தேர்தலைநடத்துவதற்குத்தடையாக இருந்த தேர்தல்கள் திருத்தச் சட்டத்தை மாற்றியமைத்து, முன்னைய, பிரதித்துவ தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான சட்டத் திருத்தத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அவர் உத்தரவாதம் வழங்கியிருக்கிறார் என்று அந்தச் செய்திகள் கூறுகின்றன.

13ஆவது திருத்தத்தின் கீழ் இதுவரையில் மாகாண சபைகளுக்கு வழங்கப்படாதிருந்த காணி மற்றும் காவல்துறை அதிகாரங்களில் காணி அதிகாரத்தை உடனடியாக வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் ரணில உறுதியளித்திருக்கிறார் என்று கூறப்படுகின்றது.

ரணில்இவ்வாறுஉறுதியளிப்பதும்அதற்கானசெயல்முறைகளில் ஈடுபடுவதும் இது ஒன்றும் முதற்றடவையல்ல. பல தடவைகள் அவர் இப்படிக்கூறித் தமிழ் மக்களை ஏமாற்றி உள்ளார். அதன் மிக அண்மைய பதிவு, அவர் அரசுத் தலைவராக நியமனம் பெற்ற உடனே 2023 மாசி 4 இலங்கையின் சுதந்திர தினத்திற்கு முன்னதாக இவற்றை நடைமுறைப்படுத்தி புதிய அரசியல் பண்பாடு ஒன்றை உருவாக்குவார் என்று அவர் திரித்த கயிறு. இது தொடர்பில் அவர் ஓரிரு கூட்டங்களையும் நடத்தினார். நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் அரசியல் கட்சிகள் அனைத்தினதும் தலைவர்கள் அந்தக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டார்கள். அங்கு ஒரு சிலர் மட்டுமே அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். ஆனாலும் ரணில் தனது வாக்குறுதியை நிறைவேற்றவில்லை.

அதன் பின்னர் பிக்குகள் வீதிக்கு இறங்கி, அரசமைப்பின் 13ஆவது பிரதியை எரித்தார்கள். அரசமைப்பை அவமதித்த அவர்கள் மீது எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காது அந்த நடவடிக்கைகளை ஆதரித்த ரணில் அதன் பின்னர் 13 பற்றிப் பேசுவதை நிறுத்திக்கொண்டார். அதுமட்டுமல்ல அதுவரையில் காவல்துறை அதிகாரங்களும் மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் என்று கூறிவந்த அவர் பிக்குகளின் எதிர்ப்பின் பின்னர் காவல்துறை அதிகாரத்தைத் தரமுடியாது என்றார். இப்போதும் அதே நிலைப்பாட்டிலேயே இருக்கிறார்.

அதன் பின்னர் அவ்வப்போது தனக்கு ஆதரவாக தமிழர் தரப்பில் யாரையாவது இழுத்துக்கொள்ள வேண்டியிருந்தால் 13ஐ நிறைவேற்றுவேன் என்று பொய் வாக்குறுதி வழங்குவதை அவர் நிரந்தரப் பழக்கமாகக் கொண்டார். வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவ்வாறு ரணிலால் ஏமாற்றப்பட்ட அண்மைக்கால தமிழ் அரசியல்வாதி. மாகாண சபைகளை நிர்வகிக்க தனிக் குழுக்களை நியமிப்பது, மாகாண சபைகளிடம் இருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்களைப் படிபடியாகத் திருப்பிவழங்குவதற்கானபழமுறைகளைநடைமுறைப்படுத்துவது என்று ரணிலை நம்பி பக்கம் பக்கமாகத் திட்டங்களைத் தயாரித்–துக்கொண்டு சென்றவிக்னேஸ்வரனுக்குகடைசியில்மிஞ்சியது ஏமாற்றமே. அதற்கு முன்னர் இதே பாணியில் கட்டுக்கட்டாகத் திட்டமுன்மொழிவுகளை வாங்கிக்கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனையும் தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவர் சம்பந்தனையும்கூட அவர் ஏமாற்றியிருந்தார்.

இந்த நாடகங்கள் எல்லாம் அவர் அரசுத் தலைவராகப் பதவியேற்ற பின்னர் நடந்தவை. அதற்கு முன்னர் அவர் தலைமை அமைச்சராக (பிரதமர்) இருந்தபோதும் புதிய அரசமைப்பு, விடுதலைப் புலிகளுடனான ஒஸ்லோ பேச்சு என்கிற வடிவத்தில் நடத்தப்பட்ட ஏமாற்று நாடகங்கள் பலவுண்டு. அவற்றை எல்லாம் விவரிக்க இன்று இந்தப் பத்தி போதாது. இந்த நிலையில் இப்போது மீண்டும் அதே ஏமாற்று நாடகத்தைக் கையில் எடுத்திருக்கிறார் ரணில் விக்கிரமசிங்க. அரசுத் தலைவராகும் அவரது கனவுக்காக தமிழர்களை மீண்டும் ஏமாற்றுவதற்கும் பலியிடுவதற்குமான அவரது முயற்சி இது.

ஒருவேளை,அவரால்ஏனையகட்சிகளின்ஆதரவின்றிஅல்லது அந்தக்கட்சிகளின்தலைவர்களுடனானகலந்துரையாடல்இன்றி இப்போது 13ஐ அவரால் நடைமுறைப்படுத்த முடியும் என்றால், அவர் இதுவரையில் தமிழர்களை ஏமாற்றி வந்தார் என்பது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணமாகும். அப்படியானால் அவர் இனியும் இது தொடர்பான வாக்குறுதிகளை நிறைவேற்றுவார் என்று எதிர்பார்த்து அவரை ஆதரிப்பது முட்டாள்தனமானது.

# தவறான அணுகுமுறை



என். சத்திய மூர்த்தி

செப்டம்பர் 21 ஜனாதிபதி தேர்தலை ஒட்டி, மத்தியில் 'ஆளும்' 'மொட்டு கட்சி' என்று தேர்தல் சின்னத்தின் பெயரில் அறியப்படும் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனா கட்சி உடைந்ததன் மூலம் யாருக்கு பாதகம் அதிகம் என்ற பட்டிமன்றம் தென்னிலங்கை அரசியலில் தொடங்கி உள்ளது. கட்சி மற்றும் கூட்டணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களில்தொண்ணூறுக்கும்அதிகமானோர் பங்குபெற்ற கூட்டத்தில் தற்போதைய ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டது என்ற அவரது அலுவலக செய்தியே பேசுபொருளாகி உள்ளது.

அதாவது, ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை ஆதரிப்பது குறித்த விடயத்தில் கட்சி உடைந்ததைத் தொடர்ந்து பெரமுனாவின் ராஜபக்ச குடும்ப தலைமைக்கு பெரிய அடி விழுந்துள்ளது என்று வியாக்கியானிப்பவர்கள் உள்ளனர். அதேசமயம், நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியும் அரசும் தங்களது பெரும்பான்மையை இழந்து விட்டனர் என்பதையே இது காட்டுவதாக பேசுவோரும் உள்ளனர்.

தற்போதைய கணக்குபடி, இந்த எண்ணிக் கையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள், மொட்டு கட்சி தலைமையில் இது வரை பணியாற்றி வந்தவர்கள். இவர்களுடன் சஜித் பிரேமதாசா தலைமையிலான 'ஐக்கிய மக்கள் சக்தி' என்று அறியப்படும் அரசியல் கட்சி மற்றும் கூட்டணி உறுப்பினர்களில் சில- பலர் ரணிலுக்கு ஆதரவாக கைகோர்த்து செயலாற்றுவார்களா, என்பதே இப்போதைய கேள்வி.

காரணம், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ரணில் ஜனாதிபதியான காலம் தொடங்கி, நேற்றுவரை, ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து, இரண்டு முதல் இருபது, இருபத்தைந்து வரையிலான எண்ணிக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரச தரப்பிற்கு தாவி, அமைச்சர் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளப் போகிறார்கள் என்ற பேச்சு கிழமை தவறாமல் பத்திரிகை செய்தியாக வெளிவந்து கொண்டிருந்தது. அவர்களில், முன்னாள் அமைச்சர் ராஜித சேனரத்தினா போன்றோர், தாங்கள் அவ்வாறு கட்சிமாற இருப்பதாக பத்திரிகையாளர்களிடமே வாக்குமூலம் அளித்தனர் என்றும் செய்திகளும் வந்த வண்ணம் இருந்தன.

ஆனால், இன்றுவரை அவ்வாறு நிகழவில்லை. இன்று மாலையோ, நாளையோ, அடுத்த கிழமையோ அவ்வாறு நடக்காது என்றும் அறுதியிட்டு கூறமுடியாது. ஆனால், அமைச்சர் பதவியை எதிர்பார்த்து மட்டுமே கட்சி மாற தயாராக இருந்த அவர்கள், இப்போது, மஹிந்த தரப்பு, ரணிலை எதிர்த்து தனியொரு வேட்பாளரை களமிறக்க உள்ள தகவலினால் பாதிக்கப்பட்டுள்ளார்களா என்பது பொறுத்திருந்து பார்க்கப்பட வேண்டிய விடயம்.

### காலத்தின் கட்டாயம்

இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் அமைச்சர் பதவியை எதிர்பார்த்தே அரசியல் செய்பவர்கள். தற்போது, ராஜபக்சக்களின் ஆதரவு இல்லாமல், ரணில் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற முடியுமா, என்பதே அவர்கள் முன்னால் இருக்கும் கேள்வி. அதற்கான பதில் தேர்தல் முடிவிலேயே தெரியும். அதுவரை, சஜித் பக்கத்திலேயே இருந்து, அவர் ஜனாதிபதியானால், அப்போது அமைச்சர்களாகும் வாய்ப்பு அவர்களுக்கு உள்ளது.

அவ்வாறு இல்லாமல், ரணிலே ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டால் அப்போது அவர்கள் கட்சிமாறி விடுவார்கள். ஒருவேளை இன்றுவரை பெயரிடப்படாத, மொட்டு கட்சியின் வேட்பாளர் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றே வைத்துக் கொள்வோம், அப்போதும் அவர்கள் பழங்கதை கூறி ராஜபக்சாக்களுடன் ஐக்கியமாகி விடுவார்கள்.

இதுவே, ஜேவிபி-ன் அனுர குமார திசநாயக்கா ஜனாதிபதியானாலும் பொருந்தும். காரணம், அனுர ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்பட்டாலும், அவருக்கும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை தேவை. ஜேவிபி அணியினருக்கு, நாடாளுமன்ற தேர்தலில் வெற்றிவாய்ப்புள்ள வேட்பாளர்களைக் கண்டுபிடிப்பதே பெரிய வேலை. என்ன, அனுர ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றுவிட்டால், அதன் அடிப்படையில், நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றி பெறமுடியும் என்பது எதிர்பார்ப்பு. அவ்வளவுதான்.

இல்லையென்று சொல்லாமல், அனுரவோ, மொட்டுக்கட்சிவேட்பாளரோ,ஏன்சஜித்பிரேமதாசாவோ ஜனாதிபதியாகத்தேர்ந்தெடுக்கப்பட்டால்,அடுத்தநாளே நாடாளுமன்றத்தைக்கலைத்துவிட்டு,புதியதேர்தலுக்கு ஆணையிடுவர். ரணில் அவ்வாறு செய்யமாட்டார் என்று சிலராவது எதிர்பார்க்கிறார்கள். என்றாலும், அவருக்கும் தனது வெற்றியின் அடிப்படையில் தடாலடியாக நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு பெரும்பான்மை பெறவேண்டும் என்பது காலத்தின் கட்டாயம்.

### பேச்சு-மூச்சு இல்லை

தென்னிலங்கை கதை இவ்வாறிருக்க, தமிழர் தலைமைகள் மத்தியில் பொதுவேட்பாளர் குறித்த சலனம் எதுவுமே இல்லை. யாழ்பாணம் தந்தை செல்வா அரங்கில் ஏழும் ஏழும் பதினான்கு என்று, அரசியல் கட்சிகளும் தன்னார்வலர்களும் கூடி பேசி, புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை கைசாத்திட்ட பின்னர்,அவர்கள்கட்டியெழுப்பப்போவதாகஅறிவித்த 'பொதுகட்டமைப்பு' குறித்து பேச்சு-மூச்சு இல்லை.

உண்மையில் அவர்கள் தனித்தனியாகவும் கூட்டாகவும் சந்தித்து பேசி வருகிறார்கள் என்றே வைத்துக் கொண்டாலும், அவர்களுடைய நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகள் குறித்து, யாழ். பத்திரிகைள்கூடக் கண்டுகொள்ளவில்லை என்பதை எண்ணி நோக்கும்போது, அந்த முயற்சியிலும் தமிழர் தரப்பு பிழைவிட்டு விட்டதோ என்றே எண்ணத்தோன்றுகிறது. என்றாலும், அவர்களைப் பொறுத்தவரையில், பொதுவேட்பாளர் என்பது ஒரு அத்தியாயமே. ஏன், முதல் அத்தியாயமே. முழுமையான புத்தகம் அல்ல.

பொதுகட்டமைப்பு குறித்து கசிந்துள்ள ஒரே அதிகாரபூர்வமும் அதிகாரபூர்வம் இல்லாததுமான ஒரே செய்தி, பொதுவேட்பாளரை தேர்ந்தெடுப்பதில் சிக்கல் முளைத்துள்ளதாக விக்னேஸ்வரனை மேற்கோள்காட்டி தோன்றியுள்ள பத்திரிகை செய்தி மட்டுமே. இது எதிர்பார்க்கப்பட்ட விடயமே.

தங்களில் யார் பெரியவர், என்றே வாழ்நாளில் கனகாலத்தை ஓட்டி வந்திருக்கும் இந்த ஏழு அரசியல் தலைவர்களையும், மக்கள் ஆதரவு என்று யாரையும், எதனையும்காட்டிக்கொள்ள முடியாத தன்னார்வலர்கள் எவ்வாறு ஒரு மந்தைக்குள் வைத்திருக்கமுடியும்? அதிலும் இந்த தன்னார்வலர்களே ஒரு குறிப்பிட்ட ஆர்வத்துடன் செயலாற்றும்போது, அதே பாணியை பழைய தலைமைகள் ஏற்றுக்கொள்ளும் என்று எவ்வாறு நினைக்க முடியும்?

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# தவறான அணுகுமுறை

4ம் பக்க தொடர்ச்சி..........

விக்னேஸ்வரன் கூறியதில் ஒரு விடயம், பொதுகட்டமைப்பினுள்ளேயே ஒரு-சிலர் தங்களுக்கு பிடித்த வேட்பாளரை முன்னிறுத்தி அரசியல் செய்கின்றனர் என்பதே. இதில் தன்னை யாரும் பொதுவேட்பாளராக ஏற்றுக்கொள்ளவில்லை என்று விக்னேஸ்வரன் குறைகூறுகிறாரா, என்பது தெரியவில்லை. என்றாலும், அவர் கூற்றின்படியே, தமிழர் தரப்பு அரசியல் ஒற்றுமை என்பது புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இல்லை என்பதை அதனைப் பின்னிருந்து உந்துவித்தவர்கள் இப்போதாவது புரிந்துகொள்ள முயற்சிப்பார்களா, என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

இன்னும் சொல்லப்போனால், இந்த அரசியல்வாதிகள் எல்லோரும், தன்னார்வலர்களில், தங்களில் ஒருவராக ஏற்றுக்கொண்டுள்ளனரா, என்பதும் புரியாத விடயம்.

## அரசியலில் ஆர்வம்

அதிலும் குறிப்பாக, அந்த தன்னார்வலர்களில் சிலரோ-பலரோ, புலம்பெயர்ந்தோர் அமைப்புகளில் யாரோ ஒரு சிலரின் உத்தரவின்படியே செயலாற்றுகிறார்கள் என்ற சந்தேகக் கீற்று முதல்நாளே தொடங்கி இருக்கும்போது, அரசியல் தலைவர்களாவது, அவர்களை நம்பி அடுத்த அடி வைப்பதாவது. சுருங்கசொன்னால், தன்னார்வலர்கள் முகைமைத்துவத்தின் மூலம், பழம் தின்று-கொட்டை போட்ட தமிழ் தலைவர்களே மீண்டும் ஒரு குடையின் கீழ் வர முயற்சி செய்துள்ளனர். அதுவும் வெறும் முயற்சிதான். அதுவே முடிவு அல்ல.


எது எப்படியோ, பொது வேட்பாளர் ஒருவரை ஒருமனதாக தேர்ந்தெடுப்பதில், பொதுகட்டமைப்பு தலைமை வெற்றி பெற்றுவிட்டாலும், அவருக்கு அனைத்து தமிழ் மக்களும் தங்களது வாக்குகளை அளித்துவிடுவார்கள் என்று எதிர்பார்ப்பதும்தவறானஅணுகுமுறை.பொதுகட்டமைப்பிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைசாத்திடும் வைபவம் உள்ளிட்ட கடந்த கால நிகழ்வுகளை வைத்து நோக்கும்போது, தமிழ் மக்களுக்கு இன அரசியல் மீது ஆர்வம் இருப்பதாகவே தெரியவில்லை. இவற்றில் எதிலுமே மக்களின் பங்களிப்பு இருக்கவில்லை என்பதே அப்பட்டமான உண்மை.

பொதுகட்டமைப்புமற்றும்பொதுவேட்பாளர்முகாந்திரத்தில், இந்த அமைப்பினர் அடுத்தடுத்து வடக்கிலும், கிழக்கிலும்,



ஏன் தலைநகர் கொழும்பு வெள்ளவத்தையிலும் பரப்புரைக் கூட்டங்கள் நடத்தி, அவற்றிற்கு வரும் மக்கள் கூட்டம் மட்டுமே ஏதோ ஒரு விதத்திலாவது தமிழர்கள் இன அரசியல் குறித்து இன்னமும் விசனப்படுகிறார்கள் என்ற எண்ணத்தை தோற்றுவிக்க முடியும். அதற்குள் இவர்கள் பதினாலு திசைகளில் பிய்த்துக்கொண்டு ஓடாமல் இருந்தால், வாழ்த்துவோம்!





கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

## Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road, Kilinochchi




- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 390/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| Ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

SPECIAL MENU PACKAGE

**BEVERAGES**

| | |
|---|---|
| JUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swehpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |




# மகா கும்பாபிஷேகத்திற்கு தயாராகும் மாவைப் பெருங்கோயில்



மாவிட்டபுரம் திருத் தலம்சுமார்நாற்பத்தேழு ஆண்டுகளுக்குப் (அண்ணளவாக ஐந்து தசாப்தங்களின்பின்னர்) பிறகு எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு பங்குனி உத்தர நாளில் மகாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பெருங்கோயில் முதலில் பொது யுகத்துக்குப் பின் (கி.பி) 789 ஆம் ஆண்டு (8 ஆம் நூற்றாண்டு) மன்னர்களால் கட்டப்பட்டது.

அப்பொழுது மதுரையரசன் திசையுக்கிரப் பெருவழுதியின் ஆணையால் சிதம்பர தீக்ஷிதரான பெரியமனதுள்ளார் மாவிட்டபுரத்துக்கு அழைத்து வரப்பெற்றார்.

இவ்வாறு இலங்கையின் அர்ச்சக- சிவாச்சார்ய பாரம்பரியத்தின் மூல வித்தாக திகழும் திருத்தலம் இது.

இலங்கையில் ஆதீன பாரம்பரியத்தின் முன்னோடியான மாவை ஆதீனம் இத்தலம் சார்ந்தது. அது ஆயிரத்து இருநூறாண்டு வரலாற்றுத் தொடர்ச்சியுடையது.

1980 களுக்கு முன் இக்கோயில் இருந்த உயர் நிலை எண்ணும் தோறும் வியப்பூட்டுவது. அது போர்- வலி வடக்கு இடப்பெயர்வு- பேரழிவு - தொடர்ச்சியாக பல ஆண்டுகள் ஊருக்குள் மக்கள் நுழைய இயலாத நிலை போன்றவற்றால் பெரிய அழிவை சந்தித்தது.

அக் காலத்தில் இக்கோயிலில் ஆண்டு தோறும் ஈழத்தின் சிறந்த நாதஸ்வரக்கலைஞருக்கு 'தங்க நாதஸ்வரம்' வழங்கி கௌரவிக்கும் வழக்கம் இருந்ததாம்.

இலங்கையில், தவில்- நாதஸ்வர இசை முதன்முதலில் தோன்றிய தலம் இதுவே என்பர்.

பெரும் பூச்சப்பரச் சோடனைகள் இங்கு தானாம் உருவாயிற்று.

வட மாகாணத்தில், மின் ஒளியூட்டப்பட்ட முதற் கோயில் இது.

இலங்கையில் முதல் ராஜகோபுரம், முதல் வெள்ளிக் கொடிமரம் என்று இந்த மாவைப்பெருங்கோயில் பொலிவுற்றது.

அக்காலத்தில், தங்கத்தாலான முத்துக்குமார சுவாமி விக்கிரகம் ஒன்றும் இருந்திருக்கிறது.

இவ்வாறாக, ஈழத்தின் வேதசிவாகமமரபுத்திருத்தலங்களில் தலைமைத்தலமாக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலே விளங்கியிருக்கிறது.

பண்டிதமணி அவர்களும் 'ஈழ வள நாட்டில் வேதாகம சம்பந்தமான ஒரே ஒரு கந்தன் கோயில் இஃதொன்றே என்று ஒரே ஒரு விரலை மட்டும் மடிக்கத்தக்க வகையில் முதன்முதல் அமைந்தது மாவிட்டபுரம்' என்றே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இடையில் ஏற்பட்ட இடர்களை அகற்றி, தற்போதைய ஆதீன கர்த்தர் மஹாராஜஸ்ரீ ஷ. இரத்தினசபாபதிக் குருக்களும், அவரது குமாரர் திருப்பரங்குன்றத்தில் முறையாக வேதாகமங்களை பயின்ற ஞானஸ்கந்தசர்மாவும் மீண்டும் திருக்கோயிலை பழைய நிலை நோக்கி திருப்ப முயற்சி செய்கிறார்கள்.

பெரிய பெரிய சுதை வடிவங்கள், நெடிதுயர்ந்த மதில்கள், என்று பழைய பெரு வடிவத்திலேயே கோயில் மீளுருவாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

பழைமையான மகோத்திர மகாரதம் யுத்தகாலத்தில் அழிவடைந்ததால், சென்ற 2019 ல் அதை விட உயரமாக, தனித்துவமாக மகோத்திரப் பெருந்தேர் அமைக்கப்பட்டு வெள்ளோட்டம் கண்டிருக்கிறது.

மாவைப்பெருமானை பாடாத யாழ்ப்பாணப்புலவர் இல்லை என்ற அளவுக்கு இப்பெருமான் பேரில் பல்வேறு பிரபந்தங்கள் நிரம்பவே இருக்கின்றன.

அருணகிரியார் காலத்தில் இத்தலம் அருக்கொணாமலை என வழங்கியது என்றும், அவ்வாறே திருப்புகழ் அருளினார் என்றும் ஒரு குறிப்பும் உண்டு.

தணிகைமணி வ.சு.செங்கல்வராய பிள்ளையின் குறிப்பும் (நகுலேசுவரம் அருகில்) அவ்வாறே கருதுவதாக உணர முடிகிறது.

துரகானன விமோசன புரி என்றும் போற்றப்படும் இத்தலம் மாருதப்புரவீகவல்லி என்ற சோழ இளவரசியின் குதிரை முகம் (மாமுகம்/ துரகானனம்) காட்டிய குன்ம நோய் விலகிய தலம்.

அது மட்டுமல்ல, இந்து மகா சமுத்திரத்தில், சூரபதுமனான மா மரத்தை அறுத்து வெற்றி பெற்ற வெற்றி பெருமான் எழுந்தருளிய மகா ஸ்தலம்.

இந்தப் பெரிய கோயிலில் ஐந்து தசாப்தங்களுக்குப் பிறகு எதிர்வரும் 2025 பங்குனி உத்தர நாளில் மகா கும்பாபிஷேகம் நிகழவுள்ளதாக ஆதீன கர்த்தரால் அறிவிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சி தருகிறது.

அடுத்த ஆண்டு நிகழும் ஜீர்ணோத்தாரண பிரதிஷ்டா கும்பாபிஷேகத்தை அடுத்து சில தசாப்தங்களாக தடைப்பட்டிருக்கும் கொடியேற்ற பெருவிழாவும் நடைபெறும் என்று கருதப்படுகின்றது.

ஆடி அமாவாசையை ஒட்டி மகாரத பவனி கண்டு தீர்த்த உத்ஸவம் காணும் இப்பெருமான் எம் எல்லோருடனும் நின்று வழி நடத்த வேண்டுவோம்.

**சிவஸ்ரீ. தி. மயூரகிரிக்குருக்கள்**

# அண்டமெல்லாம் பூத்தாள்

ஊழிகளின் தொடக்கத்தில் – புவனம் முழுதையும்– இந்த அகிலாண்ட கோடி பிரம்மாண்டத்தையும் பூத்து அருள்வதற்காக – ஜகத் ஜனனியாகிய அம்பிகை – புஷ்பவதியாக பூத்து நின்றருளினாள்..

அவ்வாறு அவள் பூப்படைந்து நின்ற திருநாள் என்று ஆடிப்பூரத்தைக் கொண்டாடுவர்.

அந்த மங்கலம் அனுசரிக்கப்படும் நாளே – ஆடிப் பூரம்!..

அம்மன் சந்நிதிகள் கோலாகலமாக விளங்கும் நாள் – ஆடிப்பூரம்!..

ஆத்தாளை எங்கள் அபிராமவல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளை புவியடங்கக்
காத்தாளை ஐங்கணைப் பாசாங்குசமும் கரும்பும் அங்கைச்
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒருதீங்கில்லையே



## ஜனநாயக ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிப்பாடே தற்போதைய அதிகார துஸ்பிரயோகம் என்பதை நாங்கள் கருத்தில் கொண்டுள்ளோம். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக வாக்குறுதியளிக்கும் உண்மையான வேட்பாளரே எங்கள் வாக்குகளிற்கு தகுதியானவர் என்றுள்ளது.

## பணவீக்கம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதாந்த மாற்றம் ஜூலையில் 0.44 சதவீதமாகப் பதிவாகியுள்ளது. இதற்கு உணவுப்பொருட்களின் விலைகளில் அவதானிக்கப்பட்ட 0.03 சதவீத அதிகரிப்பும், உணவல்லாப்பொருட்கள், சேவைகளின் விலைகள், கட்டணங்களில் அவதானிக்கப்பட்ட 0.47 சதவீத வீழ்ச்சியும் காரணமாக அமைந்தன.

பொருளாதாரத்தின் அடிப்படைப் பணவீக்கத்தைப் பிரதிபலிக்கின்ற மையப்பணவீக்கம் கடந்த ஜூலை மாதம் 0.44 சதவீதமாக மாற்றமின்றிக் காணப்பட்டது.

இது இவ்வாறிருக்க பொருத்தமான கொள்கை வழிமுறைகள் மற்றும் உறுதியான பணவீக்க எதிர்பார்க்கைகள் என்பவற்றின் மூலம் துணையளிக்கப்பட்டு, பணவீக்கமானது எதிர்வரும் காலத்தில் இலக்கிடப்பட்ட மட்டத்தை அடைந்து, நடுத்தர காலத்தில் அம்மட்டத்துக்கு மேல் பதிவாகும் என மத்திய வங்கி எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளது.

## ஜனாதிபதிக்கும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வின் பின்னர் செய்தியாளர்களுடன் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார பாதிப்புக்கு பொதுஜனபெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ச, பஸில் ராஜபக்ச மற்றும் கோட்டபய ராஜபக்ச ஆகியோர் பொறுப்புக் கூற வேண்டும் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. ஆகவே ராஜபக்சக்கள் ஆதரவளிக்கும் அரசியல் தரப்புடன் ஒருபோதும் ஒன்றிணைய போவதில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஆதரவளிக்க போவதில்லை, தமது வேட்பாளரைக் களமிறக்குவதாக பொதுஜனபெரமுன குறிப்பிட்டுள்ளமை சிறந்ததொரு அரசியல் தீர்மானமாகும். நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளிய ராஜபக்சக்களுக்கு நாட்டு மக்கள் இம்முறை தகுந்த பாடத்தை கற்பிப்பார்கள்.

ஜனாதிபதி தேர்தலில் நாட்டு மக்கள் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு நாட்டுக்காக சிறந்த தீர்மானங்களை எடுக்கவேண்டும். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது பற்றி நான் தனிப்பட்ட தீர்மானத்தை எடுக்க முடியாது. கட்சியின் நிறைவேற்றுக் குழுவே அந்தத் தீர்மானத்தை எடுக்கவேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் குறித்து சகல தரப்பினருடனும் பேச்சு நடத்தியுள்ளோம். எமது அரசியல் தீர்மானத்தை வேட்புமனு தாக்கலுக்கு முன்னர் அறிவிப்போம். எமது தீர்மானம் கொள்கையை அடிப்படையாகக் கொண்டதாக அமையும் என்றார்.

## பொலிஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது.

லலித் பத்திநாயக்க தற்போது மத்திய மாகாணங்களின் சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபராக கடமையாற்றி வருகின்றார் என்பதோடு குறித்த பதவிக்கு மேலதிகமாக நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் அவர் இப்பதவியில் நியமிகப்படுவதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

பொலிஸ் திணைக்களத்தில் சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர்கள் நிலையிலுள்ள சிரேஷ்ட அதிகாரி பட்டியலில் முன்னிலையின் அடிப்படையில் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அந்த வகையில் அடுத்த பொலிஸ் மா அதிபராக அல்லது பதில் பொலிஸ் மா அதிபராக அவர் நியமிக்கப்படாலமென எதிர்பார்த்த நிலையில் தற்போது குறித்த பதவிக்கு அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## பொது ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சு நடத்துவதற்குத் தாம் தீர்மானித்திருக்கும் நிலையில், அதன் ஓரங்கமாக சஜித் பிரேமதாஸ மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோருடன் ஏற்கனவே பேச்சுக்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. எதிர்வருங்காலத்திலும் அரசியல் தீர்வு குறித்து வேட்பாளர்களுடன் பேச்சு நடத்தப்படும்.

அதேவேளை இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்கி, தமிழ் மக்களின் கோரிக்கைகளை முன்வைப்பதன் ஊடாக அக்கோரிக்கைகள் பலமற்றதாகிவிடும் எனக் கரிசனை வெளியிட்ட அவர், இம்முறை போன்று அடுத்தடுத்த ஜனாதிபதித் தேர்தல்களிலும் தமிழ் மக்கள் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படுவாரா?

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித்தேர்தலைப்போன்று இம்முறை ஜனாதிபதித் தேர்தலிலும் தமிழ்மக்களின் வாக்குகள் மிகமுக்கியமானவையாகும். அதன் விளைவாக தற்போது நாம் பேரம்பேசக்கூடிய வலுநிலையில் இருக்கின்றோம். அவ்வாறிருக்கையில் அந்த ஆற்றலைப் புறந்தள்ளி, பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவது பொறுப்பற்ற செயலாகும். அதுமாத்திரமன்றி இத்தேர்தலில் தமிழ்பொதுவேட்பாளர் தோல்வியடைந்ததன் பின்னர், ஆட்சிபீடமேறும் பெரும்பான்மையின ஜனாதிபதி தலைமையிலான ஆளும்தரப்புடன் தமிழர்கள் தீர்வு குறித்துப் பேச்சு நடத்தமுடியாத நிலையும் ஏற்படும் - என்றார்.

மேலும் அவரும், நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனும் இணைந்து விடுத்த அழைப்புக்கு அமையசிலஜனாதிபதிவேட்பாளர்கள் லஞ்சம்ஊழலைஒழிப்பதுஉள்ளிட்ட முக்கியகேள்விகளுக்குபொதுமேடை ஒன்றில் பதிலளிப்பதற்கு இணங்கியுள்ளனர் என்றும் ஏனைய வேட்பாளர்களுடனும் கலந்துரையாடியதன் பின்னர் அந்த விவாதத்தைஎப்படிநடத்துவதெனத் தீர்மானிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

## கடற்படை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலை யாழ்ப்பாம் எடுத்து வரப்பட்டது. காணாமற்போன மீனவரைத் தேடும் பணிகள் இடம்பெற்றுவருவதாக இலங்கைக் கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

மீனவர் படகு மோதப்பட்டு ஒருவர் கொல்லப்பட்டது தொடர்பாக புதுடில்லியில் உள்ள இலங்கையின்பதில் உயர்ஆணையர் நேற்றுக் காலை வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டு இந்திய அரசின் கடும் எதிர்ப்புப் பதிவு செய்யப்பட்டது.

''துரதிர்ஷ்டவசமான உயிரிழப்பு குறித்து எங்கள் அதிர்ச்சியையும் வேதனையையும் வெளிப்படுத்தினோம். கொழும்பில் உள்ள எங்கள் உயர்ஆணையரும் இலங்கை அரசிடம் இந்த விடயத்தை எழுப்புவார்'' என்று இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மீனவர்கள் தொடர்பான பிரச்சினைகளை மனிதாபிமானத்துடன் கையாள வேண்டியதன் அவசியத்தை இந்திய அரசு எப்போதும் வலியுறுத்தி வருகிறது. அந்தவகையில் இருஅரசுகளுக்கும் இடையே நிலவும் புரிந்துணர்வு கண்டிப்பாக கடைபிடிக்கப்பட வேண்டும். மீண்டும் மீண்டும் நிகழாமல் அல்லது பலத்தைப் பயன்படுத்தாமல் இருப்பதை உறுதிசெய்ய அதிகபட்ச முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்களின் பாதுகாப்பிற்கு அரசு அதிக முன்னுரிமை அளிக்கிறது. இந்திய மீனவர்கள் தொடர்பான பிரச்சினைகள் இலங்கைத் தலைமையுடன் உயர் மட்டத்தில் தொடர்ந்து எழுப்பப்பட்டு வருவதாகவும் அது மேலும் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் உடனடியாக காங்கேசன்துறைக்கு விரைந்து சென்று மீனவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு அனைத்து உதவிகளையும் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என்று இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை கடற்பரப்பின் வடக்கு கடற்பிராந்தியத்தின் நெடுந்தீவு கடற்பரப்பை அண்மித்து இந்திய மீன்பிடிப் படகொன்று கவிழ்ந்து விபத்திற்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொருவர் காணாமல் போயுள்ளார் என்று கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபடுவதற்காக வந்த இந்திய மீன்பிடிப் படகை சுற்றிவளைக்க முயற்சித்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக கடற்படை ஊடகப்பேச்சாளர் கப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்தார்.

விபத்துக்குள்ளான மீன்பிடி படகில் நால்வர் இருந்துள்ளனர். அவர்களில் இருவர் காயமமைடந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். குறித்த மீனவர்கள் தமிழகம் - இராமேஸ்வரத்தில் இருந்து வந்து இலங்கைக் கடற்பிராந்தியத்திற்குள் பிரவேசித்துள்ளனர்.

இதனிடையே, இந்திய மீனவரின் உயிரிழப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்து மீனவர்கள் இராமேஸ்வரம் மீன்வளத்துறை அலுவலகத்தை முற்றுகையிட்டதுடன், இராமேஸ்வரம் மதுரை தேசிய நெடுஞ்சாலையில் அமர்ந்து போராட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

## உற்பத்தியாளருக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கை மிகவும் நியாயமற்ற ஒன்றாகும்.

ஐந்து நட்சத்திர விடுதிகளில் தேசிய உற்பத்தியாளர்களுக்கு உரிய இடம் வழங்குவோம் என வீராப்பு அடித்தாலும் இன்று தேசிய உற்பத்தியாளர்களுக்கும் தயாரிப்பாளர்களுக்கும் கொடுக்க வேண்டிய ஊக்கமும் பக்கபலமும் வழங்கப்படவில்லை.

இறக்குமதியாளருக்கு சலுகை வழங்கி, தேசிய உற்பத்தியாளருக்கு சுமையை ஏற்படுத்துவதும் நிலைமைகளை மாற்ற வேண்டும். தற்போதைய அரசாங்கம் இந்த நிலைப்பாட்டை மாற்றாவிடின், ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் நாம் இதனை மாற்றியமைப்போம்

தற்போது இயற்கை தேங்காய் எண்ணெய் பொருட்கள் என்ற வர்த்தகநாமத்தின் கீழ் தரம் குறைந்த செயற்கை தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகிறது.

இவை இரசாயன ரீதியாக சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்கள் ஆகும். உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் உயர்தர தேங்காய் எண்ணெய் என்ற வர்த்தகநாமத்தின் கீழ் தரம் குறைந்த தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்வது வருவது ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும். இவ்வாறு நடந்து வரும்வேளையில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை மௌனம் காத்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நுகர்வோர் அதிகார சபை மக்களின் உரிமைகளை மீறியுள்ளது. இதற்காக இலஞ்ச ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

## கட்சி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருநாடு என்ற வகையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் குறிப்பாக சர்வதேச அளவில் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்திற்கு பரிஸ் கிளப் உட்பட எமக்கு கடன் வழங்கியுள்ள நாடுகளின் ஆதரவைப் பெறுவது முதல் சவாலாக இருந்தது. அதன்போது, பல்வேறு மாற்றுக் கருத்துக்கள் கொண்ட நாடுகளை கையாள்வது மிகவும் கடினமான பணியாக மாறியது.

அதேநேரம் கடன் மறுசீரமைப்பு பணிகளை வெற்றிகரமாக நிறைவுசெய்ய வெளிநாடுகளின் ஆதரவைப் பெற முடிந்தது. அது நமது வெளியுறவுக் கொள்கைக்குக் கிடைத்த பெரும் வெற்றி என்றே கூறவேண்டும். வெளிவிவகாரக் கொள்கை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு உள்ள அந்த அறிவைப் பயன்படுத்தி வெளிநாடுகளை சரியான முறையில் முகாமைத்துவம் செய்து எம்மால் முன்னேற முடிந்தது.

கடந்த மாதத்தில் ஜப்பான், சிங்கப்பூர், ருமேனியா, போலந்து ஆகிய நாடுகளுக்கான எனது பயணங்கள் மிகவும் வெற்றிகரமாக அமைந்திருந்தன. அந்தப் பயணங்கள் நீண்டகால பிரச்சினைகள் பலவற்றை தீர்க்க உதவியது. குறிப்பாக ஜப்பானால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல திட்டங்களை மீண்டும் தொடங்கப்படவுள்ளன.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 1.1 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான 13 திட்டங்களை மீண்டும் தொடங்க முடிகிறது. சிங்கப்பூருடனான முதலீடுகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது. புதிய தொழில்வாய்ப்புகளை அதிகரிப்பது குறித்து ருமேனியாவுடன் கலந்துரையாடப்பட்டது. போலாந்தில் இலங்கையில் தூதரகம் ஒன்று இல்லை என்பதால், அது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தூரநோக்குடன் கூடிய தீர்மானங்களினால் எம்மால் இவை அனைத்தையும் செய்ய முடிந்தது என்றே கூற வேண்டும். அவர் தன்னை ஒரு தரப்புக்கு மாத்திரம் மட்டுப்படுத்தாமல் கிழக்கு மற்றும் மேற்கு நாடுகளைக் கையாளத் தேவையான வழிகாட்டுதலை வழங்கினார்.

சர்வதேச இராஜதந்திர நடவடிக்கைகள் தொடர்பான உலகப் புகழ்பெற்ற சஞ்சிகையான அயலுறவுக்கொள்கை இணையம் (foreignpolicy.com) இலங்கை தனது வெளியுறவுக் கொள்கையை நன்கு முகாமைத்துவம் செய்து வருவதாகத் தெரிவித்துள்ளது. இதன் ஊடாக நாட்டிற்குப் பெருமளவான வெற்றிகளைப் பெற்றுக்கொடுக்க முடிந்துள்ளது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், மத்திய கிழக்கில் எதிர்பாராத பதற்ற சூழ்நிலை உருவாகும் பட்சத்தில் அதனைச் சமாளிப்பதற்கான முன்கூட்டிய தயார் நிலையாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மூன்று விசேட குழுக்களை நியமித்துள்ளார். ஒரு குழு நாட்டின் தேசிய பாதுகாப்பு குறித்தும், மற்றொரு குழு அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்வது உள்ளிட்ட பொருளாதார நிலை குறித்தும் செயற்படுகிறது. இரண்டு குழுக்களையும் கண்காணிக்க ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான உயர்மட்டக் குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

2022 இல், இந்நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டது. பல்வேறு காரணங்கள் அதற்கு பங்களித்தன. ரஷ்யா - உக்ரைன் போர் காரணமாக, எரிபொருள் விலை அதிகரித்தது. நிலக்கரி, கோதுமை மா போன்றவற்றின் விலைகளும் அதிகரித்தன. விலைவாசி உயர்வை தாங்க முடியாமல் நாடு நெருக்கடிக்கு தள்ளப்பட்டது. கற்றுக்கொண்ட பாடங்களை கருத்திற்கொண்டு, மீண்டும் அவ்வாறானதொரு நிலை ஏற்படாமல் தடுப்பதற்கான முன் ஆயத்தமாக ஜனாதிபதி இவ்வாறு குழுக்களை நியமிப்பது மிகவும் பொருத்தமானது என்பதைக் கூற வேண்டும்.

அதற்கிணங்க, நாட்டில் வலுசக்தியை உறுதிப்படுத்துவதற்கும் அத்தியாவசியப் பொருட்களை தட்டுப்பாடு இன்றி வழங்குவதற்கும் வேலைத்திட்டம் ஒன்றை தயாரிப்பது தொடர்பில் கலந்துரையாடினோம். சர்வதேச நகர்வுகளை எந்தவொரு நாடும் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் நம் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களால் நாடு வீழ்ச்சியடையும் வரை நாம் பார்த்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை.

இலங்கை இன்னுமொரு வெனிசுலாவாக மாற இடமளிக்காமல், இரண்டு வருடங்களில், எமது நாட்டை ஸ்திரப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு முடிந்தது. எனவே, 2022 ஆம் ஆண்டு இந்நாட்டை நெருக்கடியிலிருந்து காப்பாற்ற ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்க அன்று நாம் எடுத்த தீர்மானம் குறித்து இன்று நாம் மகிழ்ச்சியடைகிறோம். ஒரு நாடாக நாம் மிகவும் கடினமான சூழ்நிலையிலிருந்து ஓரளவு ஸ்திரத்தன்மைக்கு வந்துள்ளோம். ஆனால் இது இன்னும் முழுமை பெறவில்லை. ஒரு சிறிய அசைவு உங்களை மீண்டும் படுகுழியில் விழச் செய்யும். எதிர்க்கட்சிகள் நாட்டை வீழ்த்தி மீண்டும் நரகத்தில் தள்ள விரும்புகிறார்களா? அல்லது நாட்டை நரகத்தில் இருந்து பாதுகாத்து மீட்டெடுப்பதா? என்பது குறித்து கவனம் செலுத்த வேண்டும் எனவே கட்சி அரசியலை புறந்தள்ளிவிட்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் முன்னெடுக்கப்படும் பொருளாதார வேலைத்திட்டத்திற்கு ஆதரவு வழங்குவது அனைவரினதும் பொறுப்பாகும் என்றார்.

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் நாணய நிதியத்தினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை நடைமுறைப்படுத்துவதில் எட்டப்பட்டுள்ள முன்னேற்றங்கள் என்பன தொடர்பில் ஆராயும் நோக்கில் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான செயற்திட்டப்பிரதானி பீற்றர் ப்ரூவர் தலைமையிலான அதிகாரிகள் குழுவினர் கொழும்புக்கு வருகை தந்துள்ளனர்.

இதன்போது அவர்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இலங்கை மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான பிரதிநிதிகள், வர்த்தக அமைப்புக்களின் தலைவர்கள், தொழிற்சங்கப்பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளனர்.

இச்சந்திப்புக்களின் முடிவில் ஊடக சந்திப்பொன்றை நடாத்துவதற்கு உத்தேசித்திருக்கும் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள், அதில் தமது அவதானிப்புக்கள் மற்றும் நிலைப்பாடுகள் குறித்து அறிவிக்கவுள்ளனர். அது இலங்கையின் விரிவாக்கப்பட்ட நிதிவசதிச் செயற்திட்டம் தொடர்பான சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளின் மூன்றாம் கட்ட மீளாய்வாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## இராஜாங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரின் சகோதரனும் அவரின் முன்னாள் செயலாளரும் 2022ஆம்ஆண்டு காணிவிவகாரம் ஒன்றுக்காக ஒருவரிடம் மட்டக்களப்பு நகரிலுள்ள ஹோட்டல் ஒன்றில் வைத்து 15இலட்சம் ரூபா இலஞ்சமாக வாங்கிய நிலையில் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# துப்பாக்கி வெடித்து ஒருவர் பொலன்னறுவையில் காயம்

பொலன்னறுவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேவாகம பகுதியில் புதன்கிழமை காலை துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் ஒருவர் காயமடைந்துள்ளார் என பொலன்னறுவை பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர் பொலன்னறுவை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

பொலன்னறுவை, சேவாகம பகுதியில் வசிக்கும் 46 வயதுடைய நபரொருவரே காயமடைந்துள்ளார்.

இவர் தனது வேட்டை துப்பாக்கியை எடுத்துக் கொண்டு தனது காணிக்குச் சென்ற போது கால் தடுக்கி கீழே தவறி வீழ்ந்ததில் கையிலிருந்த துப்பாக்கி வெடித்துக் காயமடைந்துள்ளதாக அவரது மனைவி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

காயமடைந்தவர் வர்த்தகரொருவர் என்பதுடன் கடன் பிரச்சினை காரணமாக மனதளவில் பாதிக்கப்பட்டுஇருந்துள்ளதாகபொலிஸ்விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது விபத்தா அல்லது உயிரை மாய்த்துக் கொள்வதற்கான முயற்சியா என்பது தொடர்பில் பொலன்னறுவை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# விக்டோரியா நீர்த்தேக்கத்திலிருந்து பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது

கண்டி, பல்லேகல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட விக்டோரியா நீர்த்தேக்கத்திலிருந்து புதன்கிழமை பிற்பகல் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பல்லேகல பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்த தகவல்களும் கிடைக்கவில்லை எனபொலிஸார்தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் 5 அடி உயரமுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் அடையாளம் காண முடியாத அளவிற்கு சிதைவடைந் துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சடலம் பிரேத பரிசோதனைக் காக கண்டி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பல்லேகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# மின்சாரம் தாக்கி வயோதிபர் தலாத்து ஓயாவில் உயிரிழப்பு

கண்டி, தலாத்துஓயா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் புதன்கிழமை காலை மின்சாரம் தாக்கி வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என தலாத்துஓயா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கண்டி, தலாத்துஓயா பகுதியில் வசிக்கும் 79 வயதுடைய வயோதிபரொருவரே உயிரிழந் துள்ளார்.


உயிரிழந்தவர் தனது அயல் வீட்டாளருடன் இணைந்து மிருகங் களை வேட்டையாடுவதற்காக தனது வீட்டிற்கு அருகில் மின்சார கம்பிகளைப் பொருத்தியுள்ளார்.

பின்னர், உயிரிழந்தவர் மின்சாரகம்பிகளில் மிருகங்கள் ஏதேனும் சிக்கியுள்ளதா என பார்ப்பதற்காக தனது வீட்டிற்கு அருகில் சென்ற போது மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார்தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, உயிரிழந் தவரது 63 வயதுடைய அயல் வீட்டாளர்சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைதலாத்துஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# அஷ்ரஃப் அலியின் முதல் மழைத்துளிகள் மரபு இலக்கண கவிதை நூல் வெளியீடு





(எம் சியாஜ்)

புத்தளத்தின் கவிஞர் அஷ்ஃபா அஷ்ரஃப் அலியின் முதலாவது கன்னி வெளியீடான முதல் மழைத்துளிகள் மரபு இலக்கண கவிதை நூலின் வெளியீட்டு விழா வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு புத்தளம் இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரியில் புத்தளம் செய்னப் முஸ்லிம் பெண்கள் ஆரம்ப பாடசாலையின் ஆசிரியர் எச்.எம் மில்ஹான் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக சிரேஷ்ட வைத்திய ஆலோசகர் எம்.ஐ.எம் றிபாத், கௌரவ அதிதிகளாக புத்தளம் கல்வி வலய ஓய்வு நிலை கல்விப் பணிப்பாளர் கலாபூஷணம் எம்.ஏ.எம்.எம். ஜவாத் மரைக்கார், ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் இஸ்டம் ஏ.சன்ஹீர் மற்றும் ஓய்வு நிலை ஆசிரியர் ஆலோசகர் ஏ.டி.எம் நிஜாம் ஆகியோர் கலந்து சிறப்பிக்க உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)



# பேச்சுகளின் ஊடாக தமிழ் மக்களுக்கு நிரந்தரமான தீர்வை பெறும் வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்

## சாணக்கியன் திட்டவட்டம்

பேச்சுகளின்ஊடாகதமிழ்மக்களுக்குநிரந்தரமானஅரசியல் தீர்வை பெறுவதற்கான வாய்ப்புகளை உருவாக்கக்கூடிய சூழலை நாங்கள் அமைத்துக் கொள்ள வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

ஒருசிலர்இந்ததமிழ்பொதுவேட்பாளரைவைத்துக்கொண்டு தங்களுடைய நாடாளுமன்ற தேர்தலை இலக்கு வைத்து தங்களுடைய கட்சி பிரபல்யமாகலாம் என ஒரு சிலர் இருக்கின்றார்கள் இன்னும் ஒரு சிலர் இதை பணம் உழைக்கும் ஒரு சந்தர்ப்பமாக பார்க்கின்றார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனின் பண்முகப் படுத்தப்பட்ட நிதியில் புனரமைக்கப்பட்ட ஆலயங்களுக்கு விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் அவற்றினை பார்வையிட்டார்.

மட்டக்களப்பு கல்லடி பகுதியில் உள்ள ஆலயங்களுக்கு பன்முகப்படுத்தப்பட்டநிதியில்புனரமைக்கப்பட்டஆலயங்களுக்கு சென்று புனரமைப்பு வேலைகளை பார்வையிட்டார்.

அத்துடன் குறித்த பிரதேசத்தில் உள்ள விளையாட்டுக்கழகங்களுக்கு சாணக்கியனின் பண்முகப்படுத்தப்பட்ட நிதியில் கொள்வனவுசெய்யப்பட்ட விளையாட்டு உபகரணங்களும் வழங்கிவைக்கப்பட்டன.

இங்கு கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் -

மிக விரைவாக ஓர் ஆட்சி மாற்றம் நடைபெற இருக்கின்றது ஜனாதிபதி தேர்தல் நடக்க இருக்கின்றது எவர் ஜனாதிபதியாக வந்தாலும் இந்த மாவட்டத்தில் இருக்கும் நிலைமைகள் மாற வேண்டும் அதாவது தற்போது இந்த மாவட்டத்தில் இருக்கின்ற ஊழல் மோசடி செய்கின்றவர்களை அகற்றி வரும் காலங்களில் மக்கள் சுத்தமான கரங்கள் உள்ள மக்களுடன் சேர்ந்து மக்களும் தேவையை பூர்த்தி செய்யக்



கூடியவர்களை நாங்கள் தெரிவு செய்ய வேண்டும்.

தற்போது தெற்கிலே பார்த்தால் நேற்றைய தினம் ஒரு புதிய விடயம் நாங்கள் பல காலமாக எதிர்பார்த்த விடயம் அதாவது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி எதிர்காலத்தில் அவர்கள் மனதில் வைத்திருக்கும் அதாவது மொட்டு என்கின்ற கட்சி மக்களுக்கான கட்சி அல்ல சிங்கள மக்களுக்கும் இல்லை தமிழ் மக்களுக்கும் இல்லை இலங்கையில் வாழும் எவருக்கு இல்லை மொட்டு என்பது வெறுமனே ராஜபக்ஷ குடும்பத்தினரின் ஒரு சொத்து நான் பல இடங்களில் கூறியிருக்கின்றேன்.

அதை மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழு உறுதிப்படுத்துகிறது அவர்களது தேவை அடுத்த கட்டம் நாமல் ராஜபக்சே என்கின்ற தங்களுடைய குடும்ப வாரிசின் உடைய அரசியல் எதிர்காலம் அந்த குடும்ப வாரிசினுடைய அரசியலை உறுதிப்படுத்துவதற்காக தாங்கள் பொதுஜன பெரமுன கட்சி ஒரு வேட்பாளரை களம் இறக்கப் போவதாக செய்தி வெளிவந்திருக்கின்றது.

அவர்களுடைய வெற்றி வாய்ப்பு எவ்வாறு இருக்கும் பொது ஜன பெரமுன கட்சியினுடைய வேட்பாளர் யார் என தற்போது வரை தெரியாது ஆனால் பொதுஜன பெரமுன என்கின்ற கட்சி இரண்டு வருடங்களுக்கு முன்புதான் ஒட்டு மொத்த ராஜாங்க அமைச்சர்கள் ராஜினாமா செய்து நிதி அமைச்சர்ராஜினாமாசெய்துபிரதமர்ராஜினாமாசெய்துஅந்தகட்சியினூடாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி நாட்டை விட்டு அகதியாக தப்பிச் செல்கின்ற நிலைமைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் மக்களால் விரட்டி அடிக்கப்பட்ட ஒரு கட்சி.

அந்தக் கட்சி புதிதாக வந்து ஒரு புது வேட்பாளரை களம் இறக்குவார்கள் ஆயின் மக்கள் அந்த கட்சியினுடைய கடந்த கால செயற்பாடுகளை நாட்டினை வங்குரோத்து நிலைமைக்கு பங்கு வகித்த அவர்களுக்கு அந்த வகையில் மக்கள் சிந்தித்து செயல்படுவார்கள்.

இந்த சந்தர்ப்பம் தமிழ் மக்களுக்கு இன்னமும் மேலதிகமான வாய்ப்புகளை இந்த காலத்தில் உருவாக்கி இருக்கின்றது அதாவது ரணில் விக்ரமசிங்க அவர்களுக்கு மொட்டு கட்சியினுடைய ஆதரவு இனி இல்லை என்பதனை பகிரங்கமாக கூறியிருக்கின்றார் என்றால் இனி ரணில் விக்ரமசிங்க அவர்கள் தனக்கான ஆதரவு தளத்தை அதிகரிப்பதற்காக இனி நிச்சயமாக தமிழ் மக்களின் வாக்கு அதிகமாக தேவை என உணர்ந்திருப்பார்.

அதே போன்று தான் கடந்த காலங்களில் ரணில் விக்கிரமசிங்கவுடன் மொட்டுக் கட்சியை சேர்ந்த 100 பேர் இருக்கின்ற போது நாங்கள் எந்த காரணத்தை கொண்டும் ரணில் விக்கிரமசிங்க பக்கம் திரும்பி பார்க்காத தமிழ் மக்கள் இன்றும் பிள்ளையான் டக்ளஸ் போன்றவர்கள் கொலை குற்றச்சாட்டு கொண்டவர்கள் அவருக்கு பக்கத்தில் அவருடைய மடியில் இருக்கும் வரைக்கும் தமிழ் மக்கள் அந்த பக்கத்தை இன்னமும் எட்டிப் பார்க்க மாட்டார்கள் ஆனால் ராஜபக்ஷ குடும்பத்தினர் இல்லாமல் சென்று விட்டார்களாமே இனி இந்த கோஷ்டி மாத்திரம் தான் இருக்கின்றதாமே என்று பேசுகின்ற அளவிற்கு இன்று வந்திருக்கின்றது.

அதேபோன்று ஐக்கிய மக்கள் சக்தி போன்ற காட்சிகள் இன்னமும் தமிழ் மக்களுடைய வாக்குகள் தேவை என்று அவர்களுக்கும் தமிழ் மக்களின் வாக்கு தேவை அதிகரித்து இருக்கின்றது. இவை இரண்டையும் பார்க்கின்ற போது அனுரகுமார திசாநாயக்கவினுடைய கட்சியும் தமிழ் மக்களின் வாக்கு இந்த இரு கட்சிகளுக்கும் சென்று விடுமோ என்கின்ற அச்சம் ஏற்பட்டு இருக்கின்றது.

அதைப் போன்று இன்னும் பல கோமாளிகள் போட்டியிடுவதாக பார்க்கக் கூடியதாக இருக்கின்றது இன்று உள்ளூராட்சி சபை தேர்தல்களில் வட்டாரங்களில் போட்டியிடும் வேட்பாளர்களை போன்று ஜனாதிபதி தேர்தலுக்கு போட்டியிடுவதற்கான வேட்பாளர்கள் காணப்படுகின்றன ஜனாதிபதி தேர்தலையார்கேட்கவேண்டும்என்கின்றதற்கானவரைவிலக்கணம் கூட இல்லாத நிலைக்கு இன்று வேடிக்கையான நிலைக்கு இந்த நாட்டின் நிலைமை காணப்படுகின்றது.

இன்று தமிழ் மக்களுக்கு இந்த ஜனாதிபதி தேர்தலை வைத்து பேரம் பேசக்கூடிய சந்தர்ப்பத்தை நேற்றைய தினம் இந்த மொட்டு கட்சியினுடைய ஜனாதிபதி வேட்பாளரை களம் இறங்குகிறார்கள் என்கின்ற செய்தி இன்னமும் எங்களுக்கு பேரம் பேசும் சக்தியை அதிகரித்திருக்கின்றது.

அண்மையில் யாழ் மாவட்டத்தில் ஒரு நடந்த கருப்பு ஜூலை நினைவேந்தல் கூட்டத்தில் கூறிய விடயம் நாங்கள் இன்று சஜித் பிரேமதாசர 13-வது திருத்தச் சட்டம் 13, 13-என்கின்ற தீர்வை கூறுகின்றார் அவரிடமும் தமக்கு சமஸ்டி



தான் தேவை என்று அவரிடமும் பேச்சு நடத்த வேண்டும்.

ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து அவர் இன்னமும் வேட்பு மனு தாக்கல் செய்யவில்லை அவர் வேட்பாளராக அறிவித்ததன் பிற்பாடுதான் நாங்கள் அவருடன் வேட்பாளர் என்கின்ற ரீதியில் பேரம் பேசலாம் இன்று நாட்டினுடைய ஜனாதிபதியாகபேச்சுவார்த்தையில்ஈடுபடலாம்அந்தவகையில் அனுரகுமார திசாநாயக்கவுடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் தம்மிக்க பெரேரா இது மொட்ட கட்சியில் இவர் வேட்பாளராக வருகின்றாரோ அவரோடும் பேச்சு வார்த்தையில் ஈடுபட தான் வேண்டும்.

இந்த பேச்சுவார்த்தைகளின் ஊடாக தமிழ் மக்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வை பெறுவதற்காக வாய்ப்புகளை உருவாக்கக்கூடிய சூழலை நாங்கள் அமைத்துக் கொள்ள வேண்டும்.

அத்தோடு தான் அரசியல் தீர்வு மாத்திரமல்ல மாவட்டத்தை பொறுத்த அளவில் மாவட்டத்தில் காணப்படும் குளறுபடியான நிலைமைகளுக்கு நாங்கள் ஒரு எங்களோடு சேர்ந்து செல்லக்கூடிய ஒரு ஆட்சியை உருவாக்குமாக இருந்தால் மாவட்டங்களுக்குள் காணப்படும் குளறுபடிகளை நாங்கள் நிறுத்தலாம்.

உதாரணமாக மதுபான சாலைகளை சட்ட விரோதமாக நிறுவுகின்றார்கள் என்றால் மாவட்ட நிர்வாகம் நமக்கு இருக்குமாக இருந்தால் எங்களுக்கு சார்பான அரசாங்கம் இருக்குமாக இருந்தால் நாங்கள் அவ்வாறான விடயங்களை தடுக்கலாம்.

தமிழ் பொது வேட்பாளர் விடையும் தொடர்பாக கட்சியாக நாங்கள் இருவித தீரும் எடுக்கவில்லை நாங்கள் இலங்கை தமிழரசு கட்சி ஜனாதிபதி தேர்தலுக்கு ஒரு வேட்பாளரை நிறுத்தப் போவதில்லை ஆனால் கட்சியாக பொது வேட்பாளர் என்கின்ற விடயத்தை அடுத்தடுத்த மத்திய குழு கூட்டங்களிலே நாங்கள் தீர்மானம் எடுப்போம் என நினைக்கின்றேன்.

### உங்களுடைய நிலைப்பாடு என்ன?

மக்களுக்கு சாதகமான சூழல் வந்து பேரம் பேசுவதற்கான சந்தர்ப்பம் இது ஏனென்று சொன்னால் சிவில் சமூக அமைப்புக்கள் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் பொதுமக்கள் இந்த பொது வேட்பாளர் என்கின்ற விடயத்தை பற்றி சிந்திப்பதை நான் ஒரு காலமும் குறைவு சொல்லவில்லை.

ஏனென்றால் மக்களுக்கும் அதிருப்தி சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கும் அதிருப்தி நாங்கள் எத்தனை அரசாங்கத்துடன் பேசுவது எத்தனை காலத்திற்கு ஏமாறுவது என்கின்ற வழியில் அவர்கள் செல்லலாம் அது அவர்களது ஜனநாயக உரிமை நாங்கள் அதனை மறக்க முடியாது அவர்களை குறை கூறவும் முடியாது.



ஆனால் ஒரு பொறுப்புள்ள அரசியல் கட்சியாக பொறுப்புள்ள அரசியல் தலைவர்களாக நாங்கள் மக்களுடைய எதிர்காலத்தை கருதி நல்ல விடயங்களை மக்களுக்கு எடுத்து கூற வேண்டும்.

பொது வேட்பாளர் என்கின்ற விடயம் ஊடாக எமது மக்களுக்கு உதாரணமாக சர்வதேச நாடு மத்தியஸ்தம் வகித்து அரசாங்கத்துடன் பேசி நாங்கள் சில ஒப்பந்தங்களை செய்யலாம் என்று பல சர்வதேச நாடுகளுடன் பேசிய போது அவர்கள் கூறுகின்றார்கள் ஒப்பந்தம் செய்துவிட்டு இலங்கை அரசாங்கம் செய்யாவிட்டால் நாங்கள் ராணுவத்தை கொண்டு வந்து அவர்களை கட்டுப்படுத்தலாமா? என்கின்ற கேள்வி எங்களிடம் கேட்கின்றார்கள்.

அவ்வாறான ஒரு நிலையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திட்ட விடயம் தொடர்பாக சில அரசியல்வாதிகள் அவதானமாக இருக்க வேண்டும் மக்கள் ஒருசிலர் இந்த பொது வேட்பாளரை வைத்துக் கொண்டு தங்களுடைய பாராளுமன்ற தேர்தலை இலக்கு வைத்து தங்களுடைய கட்சி பிரபல்யமாகலாம் என ஒரு சிலர் இருக்கின்றார்கள் இன்னும் ஒருசிலர் இதை பணம் உழைக்கும் ஒரு சந்தர்ப்பமாக பார்க்கின்றார்கள் இன்னும் ஒரு சிலர் அவர்களுக்கு என்ன தேவை என்றே தெரியாது ஒரு நாள் கூறுகின்றார்கள் ஜனாதிபதியினுடைய காலத்தை நீடிக்க வேண்டுமென்று இன்னும் ஒரு நாள் கூறுகின்றார்கள் இந்த ஜனாதிபதி இல்லாமல் இன்னும் ஒரு நல்ல ஜனாதிபதி வேண்டும் என்கின்றார்கள் இன்னும் ஒரு நாள் கூறுகின்றார்கள் பொது வேட்பாளர் என்கின்றார்கள் இதில் இரண்டாவது வாக்கை பயன்படுத்த வேண்டும் என்கின்றார்கள் என்ன நடப்பது என்பது ஒரு சுய சிந்தனை செய்யக்கூடிய அளவிற்கு மனநிலை இல்லாதவர்களும் இந்த கைச்சாற்றில் இருக்கின்றார்களா என்கின்ற சந்தேகம் இருக்கின்றது.

தற்போது பல காட்சிகள் உடைந்து காணப்படுகின்றன மொத்த கட்சியில் ஏற்படுகின்ற பிரச்சினை தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன.?

அதை நான் எவ்வாறு கூறுவது அதைப் பற்றி அந்த கட்சியை சேர்ந்தவர்கள் தான் கூற வேண்டும் இந்த மாவட்டத்திலும் வியாழேந்திரன் என்கின்ற அமைச்சர் இருக்கிறார் ராஜாங்க அமைச்சர் அவர் மொட்டு கட்சியில் தான் தேர்தல் போட்டியிட்டார் அவர் மொத்த கட்சியின் உடைய மாவட்ட அமைப்பாளர் என்கின்ற பதவியையும் வைத்திருந்தவர்.

லொகான் ரத்வத்த என்கின்ற அமைச்சர் வவுனியாவில்



சிறைச்சாலையில் வைத்து எமது தமிழ் அரசியல் கைதிகளை துப்பாக்கியை வாயில் வைத்து சப்பாத்தை நக்க வைத்த நேரம் இச்சம்பவம் இடம்பெற்று இரண்டு நாட்களின் பின்னர் மட்டக்களப்பிற்கே வருகை தந்த போது இவர் சென்று அவரை வரவேற்று மட்டக்களப்பில் மேடை போட்டு அவருக்கு பக்கத்தில் இருந்து அழகு பார்த்தவர்தான் அவர்.

அவரை தேடிப்பிடித்து மொட்டு கட்சியை பற்றி அவரிடம் கேள்வி கேட்டால் நன்றாக இருக்கும். நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் கல்லடியில் உள்ள விளையாட்டு கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கி வைத்ததுடன் அவரது பன்முகப்படுத்த நிதியில் ஆலயத்திற்கு வழங்கப்பட்டு அதன் கட்டுமான பணிகள் தொடர்பாக நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன் போது ஆலய கட்டுமான பணிகளை பார்வையிட்டு மேலதிக தேவைகள் தொடர்பாக கலந்துரையாடியதன் பிற்பாடு விளையாட்டு கழகத்திற்கான விளையாட்டு உபகரணங்களை கழக உறுப்பினர்களிடம் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் விளையாட்டு கழக உறுப்பினர்கள் ஆலய நிர்வாக சபை உறுப்பினர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)

# ஐஸ் போதைப் பொருளுடன் கைதான தாயும் மகனும்

## விசாரணை முன்னெடுப்பு

(பாறுக் ஷிஹான்)

ஐஸ் போதைப் பொருளுடன் கைதானதாய்மற்றும்மகன்உள்ளிட்டோரிடம்மேலதிகவிசாரணைகளை இறக்காமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

அம்பாறைமாவட்டம்இறக்காமம் பொலீஸ்பிரிவுக்குட்பட்டவரிப்பத்தான் சேனை பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை ஐஸ் போதைபொருளுடன்தாயும்மகனும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இறக்காமம் விசேட புலனாய்வு பொலீஸ் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இறக்காமம் பொலீஸ் பெறுப்பதிகாரி ஜே.எம்.மஹிந்தசேனரத்னவழிகாட்டலுக்கு அமைவாக விசேட புலனாய்வு பொறுப்பதிகாரி ஜே.எம்.பி.கலந்த சூரிய தலைமையிலான குழுவினர்மேற்கொண்டசோதனை நடவடிக்கையின் போது 6 மில்லி 200 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபர்களான தாய் மற்றும் மகன் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அத்துடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள்இறக்காமம்பொலீஸ் நிலையத்தில் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன் அம்பாறை நீதிவான்நீதிமன்றத்தில்ஆஜர்செய்ய நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# இலவசமாக பிறப்பு சான்றிதழ் பெற்றுக்கொடுக்கப்பட்டன



(பி.கேதீஸ்)

தலவாக்கலை கிறேட் வெஸ்டன் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் சிலருக்கு பிறப்புச் சான்றிதழ்கள் இல்லாத நிலையில் அவர்களுக்கான பிறப்புச்சான்றிதழ்கள் இலவசமாக டீ பீல்ட் நிறுவனத்தினூடாக பெற்றுக்கொடுக்கப்பட்டன. இச்சான்றிதழ்களை டீ பீல்ட் நிறுவனத்தின் சிறுவர் பாதுகாப்பு முகாமையாளர் லசந்த வெலிகமே மற்றும் பாடசா





லையின் அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ் மாணவர்களிடமும்பெற்றோரிடமும் வழங்கி வைத்தனர். (05)



## கல்முனை அல் – பஹ்ரியா மகா வித்திக்கு ஆய்வுகூட மேம்பாட்டுக்காக நிதி ஒதுக்கீடு

(நூருல் ஹுதா உமர்

முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அவர்களின் முயற்சியின் பயனாக ஜனாதிபதியின் விசேட நிதி ஒதுக்கீட்டில் கல்முனை கல்வி வலய கல்முனை கமு/கமு/ அல்- பஹ்ரியா மகா வித்தியாலயத்திற்கு விஞ்ஞான ஆய்வுகூட மேம்பாட்டுக்காக 2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கமு/கமு/ அல் பஹ்ரியா மகா வித்தியாலய அதிபர் எம்.ஏ சலாம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்துகொண்டு நிதி ஒதுக்கீட்டு ஆவணத்தைக் கையளித்தார்.

இந்நிகழ்வில் கல்முனை கோட்டக்கல்விப் பணிப்பாளர் யூஎல்றியால் கௌரவ அதிதியாக கலந்து கொண்டதுடன் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினரின் ஆலோசகருமான எம்.ஏ. கலீலுர் ரஹ்மான் நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் நௌபர் ஏ பாபா, பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் எஸ்.எல் ஹமீட், கல்முனை 12 ஆம் வட்டார ஸ்ரீ ல.மு.கா. அமைப்பாளர் எம்.எஸ். பளீல், முன்னாள் வேட்பாளர் எம்.ரகுமான் உட்பட பழைய மாணவர்கள் சங்கத்தினர், பாடசாலை பிரதி, உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலர் கலந்துகொண்டனர். (05)

## திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலய ஆடி அமாவாசை சமுத்திரத் தீர்த்தோற்சவம்







(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை சமுத்திர தீர்த்தோற்சவம் ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவிருக்கிறது.

இந்த உற்சவம் கடந்த 18 நாள்கள் பகல் இரவுத் திருவிழாக்களாக நடைபெற்று வருகிறது .

நான்காம் திகதி தீர்த்த உற்சவத் திற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என ஆலய பரிபாலன சபையின் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தெரிவித்தார் .

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முகம கேஸ்வரக்குருக்கள் முன்னிலையில் ஆலயகுரு சிவஸ்ரீ அங்குசநாதக்குருக்கள் தலைமையில் தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது.

பிதிர்க்கடன் செலுத்துகின்ற ஆடி அமாவாசை உற்சவத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொள்வார்கள் என்பதற்காக முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தீர்த்தம் அன்று பிதிர்க்கடன் செலுத்துகின்றவர்களுக்கு வசதியாக சிவாச்சாரியார்களை உள்ளடக்கி பிதிர்க்கடன் நிறைவேற்றுகின்ற வேலை முன்னெடுக்கப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கு மாகாணத்தில் எச்.என்.டி.ஈ. ஆசிரியர் நியமனங்கள் இழுத்தடிப்பு

## தேசிய பாடசாலைகளுக்கு நியமிக்கக் கோருகிறது கிழக்கு கல்வி நிருவாக சேவை சங்கம்

(செயிட் ஆஷிப்)

கிழக்கு மாகாண பாடசாலைகளில்

உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா (எச்.என்.டி.ஈ) ஆசிரியர் நியமனத்திற்காக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு இன்னும் நியமனம் வழங்காமல் கிழக்கு மாகாண சபை இழுத்தடிப்பு செய்து வருவதால் அவர்களை கிழக்கிலுள்ள தேசிய பாடசாலைகளுக்கு நியமிக்க கல்வி அமைச்சு உடனடி நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என்று இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்க செயலாளரும் மனித உரிமை செயற்பாட்டாளருமான ஏ.எல்.எம். முக்தார் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதனை வலியுறுத்தி கல்வி அமைச்சின் செயலாளருக்கு அவர் மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் -

கல்வி அமைச்சால் போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு, கிழக்கு மாகாண சபை பாடசாலைகளுக்கு நியமனம் செய்வதற்காக தெரிவானோரின் 60 பேர் கொண்ட பெயர்ப் பட்டியல் ஜூலை 03 ஆம் திகதி கிழக்கு மாகாண சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

ஆனால் ஒரு மாத காலமாகியும் அந்த ஆசிரியர் நியமனம் கிழக்கு மாகாண சபையால் இன்னும் வழங்கப்படாமல் இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருகிறது.

எனினும் இதுபோல் ஏனைய மாகாணங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பெயர் பட்டியலுக்கு அமைவாக குறித்த ஆசிரியர் நியமனங்கள் கடந்த 08 ஆம் திகதி வழங்கப்பட்டு விட்டது.

எனினும் கிழக்கு மாகாண சபை ஒரு மாத காலமாகியும் உரியவர்களுக்கு இந்த ஆசிரியர் நியமனங்களை வழங்காமல் பல்வேறு சாக்குப் போக்குகளைக் கூறிக் காலம் கடத்தி வருகிறது.

இதனால் நியமனத்திற்காக காத்திருக்கும் 60 வேலையற்ற ஆங்கில டிப்ளோமாதாரிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அரச தொழில் ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் அவர்களது அடிப்படை மனித உரிமை கிழக்கு மாகாண சபை அதிகாரிகளால் மீறப்படுகின்றது.

இது தொடர்பாக கடந்த 24 ஆம் திகதி கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, அமைச்சின் மேலதிக செயலாளர் அமல் எதிரிசூரிய ஆகியோரை தாம் நேரடியாக சந்தித்து கலந்துரையாடினோம். அதன்போது இவர்களது ஆசிரியர் நியமனம் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் உத்தரவிட்டதுடன் கிழக்கு மாகாண அதிகாரிகளுடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்.

எனவே, கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள பட்டியலை கல்வி அமைச்சு உடனடியாக மீளப்பெற்று அவர்களை தேசிய பாடசாலைகளுக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த மகஜரில் வலியுறுத்தியுள்ளோம்.

இவ்வாறு வட மாகாணத்தில் நியமனம் வழங்கப்படாதிருந்த 13 பேருக்குரிய நியமனம் தேசிய பாடசாலைகளுக்கு மாற்றி வழங்கப்பட்டுள்ளதை முன்னுதாரணமாக சுட்டிக்காட்டியுள்ளோம்- என்றார். (05)

# இலங்கை தாய்மொழி ஆசிரியர் சங்கத்தினர் மடு கல்விப்பணிப்பாளருடன் கலந்துரையாடல்

2024-07-31 திகதி சங்கத்தின் பொதுச்செயலர் புயல்நேசன் அவரும் உபதலைவர் ம . நிஜகரனும் மடு கல்வி வலய பாடசாலைகளுக்கு விஜயம் மேற்கொண்டதுடன், வலயக் கல்விப் பணிப்பாளரையும் சந்தித்து கலந்துரையாடினர்.

ஆசிரியர்களின் குறைகளைக் கேட்டறிந்தனர். அதிபர்களும் ஆசிரியர்களும் கல்வித்துறையில் இடம் பெறும் ஊழல்களை முன்வைத்தனர். சங்க அங்கத்தவர் விண்ணப்பப்படிவங்களை வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.சி. வொலன்ரைன் அவரின் முன்னிலையில் நிதி உதவியாளர் அவரிடம் உப தலைவர் கையளித்தார். 'மடு கல்வி வலயத்தில் எமது சங்க அங்கத்தவர் 25 விழுக்காட்டைத் தாண்டியது' என பொதுச்செயலாளர் புயல்நேசன் அவர் நிதர்சன செய்தி பிரிவுக்குத் தெரிவித்தார். (05)

# சின்ன விசாரை இடைக்கண்ட சிறுபோக வேளாண்மை அறுவடை நிகழ்வு ஆரம்பம்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சின்ன விசாரை இடைக்கண்டத்தில் இவ்வாண்டின் (2024) சிறுபோக வேளாண்மை செய்கையின் அறுவடை ஆரம்ப நிகழ்வு சின்ன விசாரை வயல் கண்டத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சின்ன விசாரை இடைக் கண்ட குழுவின் தலைவர் அல்ஹாஜ் அப்துல் மஜீத் ஜே.பி. தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சம்மாந்துறை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி ஆர். வேல்கஜன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

இதன்போது பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட சம்மாந்துறை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி ஆர். வேல் கஜனுக்கு சின்ன விசாரை இடைக் கண்ட குழு தலைவர் அப்துல் மஜீத் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

இந் நிகழ்வில், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் முகம்மது பைசல், சின்ன விசாரை இடைக் கண்ட நிர்வாக சபையின் கணக்குப் பரிசோதகர் பொறியியலாளர் என்.எம். நழீம், சின்ன விசாரை இடைக் கண்ட நிர்வாக சபையின் செயலாளர் அப்துல் வகீல், பொருளாளர் எம்.எச்.எம். அர்சாத், வட்டவிதானை எம்.ஏ. அமீர் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள், விவசாயிகள், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)



# மருதமுனை ஹம்றா வித்தியாலய மாணவி சுமையா தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு

(நூருல் ஹுதா உமர்)

அண்மையில் நடைபெற்ற மாகாண மட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் வெற்றி பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள கல்முனை கல்வி வலய மருதமுனை கமு/கமு/அல்-ஹம்றா வித்தியாலய மாணவியான முஹம்மட் வலீத் பாத்திமா சுமையாவினை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம்.எம். முஹம்மட் நியாஸின் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது இணைப் பாடவிதானதுக்குப் பொறுப்பான பிரதி அதிபர் ஏ.எம். சிரின்தாஜ், உதவி அதிபர்கள் மற்றும் சமூக விஞ்ஞான பாட ஆசிரியர்கள் ஒன்றிணைந்து சாதனை மாணவியை மாலை அணிவித்து கௌரவித்தார்கள்.

அத்தோடு இம் மாணவி தேசிய ரீதியிலும் முதல்நிலை பெற்று பாடசாலைக்கும், வலயத்திற்கும் சமூகத்திற்கும் பெருமை சேர்த்திட பாடசாலை சமூகம் சார்பாக அவர்கள் வாழ்த்தியதோடு, இதற்கு உறுதுணையாகவிருந்த வலயக்கல்விப் பணிப்பாளருக்கும் , பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், சமூக விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர், கல்லூரியின் முதல்வர், பிரதி அதிபர்கள், பாட ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கும் பாடசாலை சார்பாக நன்றிகள் தெரிவிக்கப்பட்டது.இவரது சகோதரியும், இவரும் கடந்த காலங்களிலும் பல்வேறு வலயமட்ட, மாவட்ட மட்ட, மாகாண மட்ட, தேசிய மட்ட சாதனைகளை நிலைநாட்டியவர்கள் என்பதுடன் பிராந்திய கல்வி மேம்பாட்டுக்கு பல்வேறு வகையிலும் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துவரும் எம்.ஐ.எம். வலீத் அவர்களின் புதல்வியுமாவார். (05)

# கல்முனை அல் - மிஸ்பாஹ் மகா வித்தி. பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்



(எம்.என்.எம்.அப்ராஸ்)

கல்முனை அல்-மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் பாடசாலையின் அதிபர் எம்.ஐ. அப்துல் ரசாக் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் புதன் கிழமை இரவு இடம்பெற்றது.

இதன் போது நிகழ்வின் ஆரம்பமாக பாடசாலையின் நிலை தொடர்பில் அதிபர் எம்.ஐ.அப்துல் ரசாக் கருத்து தெரிவித்ததுடன் மேலும் பாடசாலையில் மேற்கொள்ளப்பட வேண்டிய பல்வேறு பணிகள் தொடர்பாக பழைய மாணவர்கள் மத்தியில் ஆராயப்பட்டதன் பின்னர் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

பழைய மாணவர் சங்கத் தலைவராக பாடசாலை அதிபர் எம்.ஐ.அப்துல் ரசாக், உபதலைவராக டீயுட் ஆடையகத்தின் பணிப்பாளர் எஸ்.எம். சப்ராஸ்,

செயலாளராக கல்முனை அல்-பஹ்ரியா மகா வித்தியாலயத்தின் உதவி அதிபர் எம்.எச்.ஐ. இஸ்ஸத், பொருளாலராக விளையாட்டு பயிற்றுவிப்பாளர் எம்.ஏ.எம்.ரியால் ஆலோசகராக கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் எம்.ஐ.எம்.அப்துல் மனாப் உட்பட மேலும் செயற்குழு உறுப்பினர்களாக பழைய மாணவர்கள் பிரிவு ரீதியாக ஒவ்வொருவர் இதன் போது தெரிவு செய்யப்பட்டனர். (05)



# இராணுவ முகாமுக்கு காணி வழங்கி வைப்பு



(சர்ஜூன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட மல்வத்தை 24 ஆம் இராணுவ படை பிரிவுக்கு காணியின் ஒரு பகுதியை தற்காலிகமாக கையளிக்கும் நிகழ்வு புதன்கிழமை சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா தலைமையில் இடம்பெற்றது.

மல்வத்தை 24 ஆம் படைப்பிரிவின் பொறுப்பதிகாரி லெப்டினண்ட் கேணல் ஜெய சேனவுடம் பிரதேச செயலாளர் காணியின் ஆவணத்தை கையளித்தார்.

இந் நிகழ்வில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்

எம் அஸ்லம், காணி உத்தியோகத்தர் டி.கே.எம் ஜவாஹீர் ஆகியோர் கலந்து கொண்டனர். (05)

# ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்புக்கு ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஒப்பந்தம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது சுயாதீன தேர்தல் கண்காணிப்புப் பணிகளை முன்னெடுப்பது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும், ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையில் நிர்வாக மட்ட உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் சுயாதீன தேர்தல் கண்காணிப்புப் பணிகளை முன்னெடுக்கவேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அழைப்புவிடுத்திருந்தது.

அவ்வழைப்பை ஐரோப்பிய ஒன்றியம்



9 ஆவது ஜனாதிபதித்தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடத்தப்படுமென தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருக்கும் நிலையில், பல்வேறு அரசியல் கட்சிகளும் நாடளாவிய ரீதியில் மக்கள் கூட்டங்களை நடத்திவருகின்றன.

இருப்பினும், எதிர்வரும் 15 ஆம் திகதி வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னராக காலப்பகுதியில் இடம்பெறும் தேர்தல் விதி மீறல்கள் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவும், தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களும் அவதானம் செலுத்திவருகின்றன.

அதேவேளை தேர்தல் நடைபெறும் காலப்பகுதியில் வழமைபோன்று இம்முறையும் தேர்தல் கண்காணிப்புப் பணிகளை முன்னெடுக்குமாறு ஐரோப்பிய ஒன்றியத்துக்கு தேர்தல்கள் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அழைப்புவிடுத்திருந்தது.

ஏற்றுக்கொண்டிருக்கும் நிலையில், இது தொடர்பாகத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்கவுக்கும் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிக்கும் இடையிலான நிர்வாகமட்ட உடன்படிக்கை புதன்கிழமை கைச்சாத்திடப்பட்டது.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்கும் பணியில் தமது தேர்தல் கண்காணிப்புக்குழுவை ஈடுபடுத்தும் செயன்முறையின் முதற்கட்டம் இதுவென ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அதேபோன்று இந்த ஆரம்பகட்ட உடன்படிக்கையின் அடுத்தகட்டமாக தேர்தல் கண்காணிப்புப்பணியில் ஈடுபடவுள்ள ஐரோப்பிய ஒன்றியக் கண்காணிப்புக்குழுவின் விவரங்கள் வெளியிடப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (05)

# கணவன் தாக்கப்பட்டுக் கொலை மனைவியும் இளைஞனும் கைது

யாழ்ப்பாணத்தில் வன்முறை கும்பலை ஏவி கணவனை படுகொலை செய்த குற்றச்சாட்டில் மனைவியையும், மனைவிக்கு உதவி புரிந்த குற்றத்தில் இளைஞர் ஒருவரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

உடுப்பிட்டி இமையான் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் கோழி இறைச்சி விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளார்.

கடந்த ஜூன் மாதம் 03 ஆம் திகதி அதிகாலை வெளிமாவட்டத்தில் இருந்து வாகனம் ஒன்றில் கோழிகள் கொண்டுவரப்பட்டு, அந்த நபருக்கு விநியோகம் செய்த பின்னர் வாகனம் திரும்பிச் சென்றுள்ளது.

அதன் பின்னர், வீட்டின் வெளியே சத்தம் கேட்டபோது குடும்பஸ்தர் வெளியே வந்து பார்த்தவேளை, வன்முறை கும்பலொன்று அவர் மீது வாள்வெட்டு தாக்குதலில் ஈடுபட்டுள்ளது.

வீட்டுக்குள்ளிருந்த மனைவி சத்தம் கேட்டு வெளியே வந்தபோது, வாள் முனையில் அச்சுறுத்தி அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை கொள்ளையிட்டு கும்பல் தப்பிச் சென்றுள்ளது.

வாள்வெட்டில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த சில நாள்களில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

குடும்பஸ்தரின் கொலையை, நகைக்கான கொலையாக மாற்றவே நகை கொள்ளையடிக்கப்பட்டதாக பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், கொலை செய்யப்பட்டவரின் மனைவியை பொலிஸார் கைதுசெய்து விசாரணைகளைத் தொடர்ந்துள்ளனர்.

மனைவியிடம் நடத்திய விசாரணைகளின் அடிப்படையில், இந்த தாக்குதலுக்காக உதவிய மற்றுமொரு இளைஞனையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் பொலிஸார் தற்போது தீவிரமாக விசாரித்து வருகின்றனர். (05)

# யாழ்ப்பாணத்தில் பஸ்ஸில் பயணித்த வெளிநாட்டவர்களின் நகைகள் திருட்டு

யாழ்ப்பாணத்தில் பஸ்ஸில் பயணம் செய்த வெளிநாட்டவர்களின் 11 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன.

வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள் பஸ்ஸில் யாழ். நகர் பகுதிக்கு வந்து திரும்பியபோதே அவர்களின் நகைகள் திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (05)

# சிறுவர்களின் பிரச்சினைகளை அறிக்கையிடல் கிழக்கு ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வு





(எம். எப். றிபாஸ்)

எங்குமுள்ள சிறுவர்களையும் சூழலையும் பாதுகாத்தல் அமைப்பு ஒழுங்கு செய்திருந்த 'சிறுவர் பிரச்சினைகளை அறிக்கையிடும்போது பின்பற்ற வேண்டிய நன்னெறி முறை' என்ற தலைப்பில் ,மட்டக்களப்பு,அம்பாறை மற்றும் அம்பாறை மாவட்டத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான மூன்று நாள் வதிவிட செயலமர்வு மட்டக்களப்பு கல்லடியில் கிரீன் கார்டன் ஹோட்டலில் நடைபெற்றது.

இச் செயலமர்வில் வளவாளர்களாக மஹ்ரூப், கலாநிதி றஸ்மின்,டொக்டர் ஆகியோர் கலந்து கொண்டனர். (05)

# திருகோணமலையில் டொல்பின் சிலை திறப்பு

திருகோணமலை நகரத்தை அழகுபடுத்தும் விதமாக திருகோணமலை நகராட்சி மன்றத்துக்கு முன்பாக உள்ள சுற்றுவட்டத்தில் புதிதாக டொல்பின் சிலை அமைக்கப்பட்டு புதன்கிழமை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் திறந்து வைக்கப்பட்டது.

நகராட்சி மன்ற செயலாளர் தே.ஜெய விஷ்ணுவின் வேண்டுகோளுக்கிணங்க உத்தியோகபூர்வமாக இந்த சிலை திறக்கப்பட்டது.

இதன்போது நகராட்சி மன்ற உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (05)



# படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சகாதேவன் நிலக்சனின் நினைவேந்தல்!




ஊடகவியலாளர் சகாதேவன் நிலக்சனின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்றது.

யாழ். ஊடக அமையத்தில் அமையத்தின் தலைவர் கு. செல்வக்குமார் தலைமையில் நடைபெற்ற நினைவேந்தலில் நிலக்சனின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணியப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டு சுடரேற்றப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் ஊடக கற்கை மாணவனும் சாளரம் சஞ்சிகையின் ஆசிரியரும் யாழ். மாணவர் பேரவையின் முன்னாள் தலைவருமான சகாதேவன் நிலக்சன் 2007ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி அவரது வீட்டில் இருந்த வேளை, அவரது வீட்டுக்கு அதிகாலை 5 மணியளவில் சென்ற ஆயுததாரிகள் நிலக்சனை வெளியே அழைத்து அவரது பெற்றோர்கள் முன்னிலையில் சுட்டு படுகொலை செய்தனர். (05)



JRIDE
BEYOND THE ROAD

Safety and comfort are our concern

ஜேரைட்
# JRIDE
## TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide

DOWNLOAD PASSENGER APP:

ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
**நாங்கள் தயாராகிவிட்டோம்!**
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)

jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install

இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store



வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!

இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!

DOWNLOAD DRIVER APP:

jride
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install

YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE

GET IT ON Google Play
Download on the App Store

## SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி

நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?

விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

**HOTLINE : 706563213 / 703563213**

JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.08.2024இல் வெளியிடப்பெற்றது